பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

சந்தா விபரம்.

	ரூ. அ.
வருட சந்தா.	3—0
6 மாத சந்தா.	1–12
வெளிநாடுகளுக்கு வருட சந்தா	4—0

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

விளம்பர விகிதம்.

	ரூ. அ.
கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு	5—
சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு	0—

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும் பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரதியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ளு பங்குனி மீ கஉ (14—3—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் சு



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் [illegible]

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் [illegible] கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே [illegible] நியாயமான விலைக்கு விற்று வருகிறார்.

S. இராமநாதன்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

மதிப்புரை.

திருக்குறட் குமரேச வெண்பா.

திருவள்ளுவ தேவநாயனாருளிய திருக்குறளுக்கு உரை வரைந்த ஆசிரியர், தருமர், மணக்குடவர், தாமத்தர், மச்சர் பரிமேலழகராதியபதின்மராவர். அவருள் பரிமேலழகியரியற்றிய உரையே தற்காலத்தில் பெரிதும் பாராட்டப்பெற்றுப் பயின்று வரப்படுகின்றன வெனினும், அவ்வுரை இலக்கிய இலக்கண நூல்களில வல்லுனராகிய புலவர் பெருமக்களுக்கன்றி, சாதாரணக் கல்வியறிவுடையார்க்கு எளிதில் விளங்கா வென்பது யாவருமறிந்த விஷயம். இக்குறையை நிவர்த்திப்பான் வேண்டியே, அருளன்பு நிறைந்த திருவாளர் தூத்துக்குடி ஜெகவீரராம பாண்டியனவர்கள் இயற்றிய, "திருக்குறட்குமரேச வெண்பா," என்னும் நூலில் முதல் நான்கு மாத சஞ்சிகைகளைக் கண்ணுற்றோம். அவற்றிலுள்ள ஒவ்வொரு நேரிசை வெண்பாக்களும், தட்பநுட்பங்கள் சிறந்து விளங்குவதோடு, சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல் என்னும் அழகு பொருந்த அக்குறளுக்கேற்ப கதைக்குறிப்புகள் முதல் இரண்டடியாகவும் அவற்றிலுள்ள நீதியை விளக்கும் நீர்மையை உடைய, திருக்குறட்பாவை பின் இரண்டடிகளாகவும், தன்னிடத்தே பதிய வைத்து திருவெண்பாக்களாய் பான்மையுருகின்றன. அன்றியும் எடுத்துக்காட்டாய், விரித்துக் கூறியிருக்கும் தீந்தமிழ் சரித்திர வசனங்களும் அரிய பல செய்யுட்களும் கற்போர் மனதில் பதியும்படி மிளிருகின்றது. ஆதலின் தமிழ் மக்கள் இந்நூல் முழுவதையும், ஒருங்கே வாங்கி, முறையே படித்து வருவார்களேல் யாவரும் எளிதில் சிறந்த அறிவுபெற்று பண்டிதராய் விளங்குவாரென்பதில் யாதொருதடையுமில்லை என உறுதியாய்ச்செப்புகிறோம். நமது பண்டிதர் ஸ்ரீமான் ஜெகவீரராம பாண்டியவர்களின் அருமையான இம் முயர்ச்சி முழுதும் முற்றுப் பெற கடவுளை வழுத்துவதுடன் நமது தமிழ் மக்களையும் இம் முயர்ச்சிக்கு ஆதரவளிக்கு முகத்தான், சந்தாதாராய் சேர்ந்து ஆதரிக்க விண்ணப்பிக்கின்றோம்.

இதன் வருட சந்தா ரூ 4—0—0
தனிப்பிரதி அணா 0—8—0

விலாசம்:—

ஜெகவீரபாண்டியன்
திருவள்ளுவர் நிலயம், தூத்துக்குடி.

கோயமுத்தூரில் காங்கிரஸ் பிரசாரத்தின் யோக்கியதை!

சில தினங்களுக்குமுன் கோயமுத்தூர் சேர்மெனின் சில பிராமண விரோதிகளும், அவர்கள் வாலைப்பிடித்துக்கொண்டு வயறு வளர்க்கும் சில பிராமணரல்லாதாரும், சேர்ந்து காங்கிரஸ் மீட்டிங்கு என்பதாகப் பெயர் வைத்து, காங்கிரஸ் கொடியுடன் டவுண் ஹாலில், ஒரு கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்தில் ஒரு பிராமணர் அக்ராசனம் வகிக்கவும், மற்றொரு பிராமணர் பேசவும் சில பிராமணர்கள் உட்கார்ந்துகொண்டு சிரிக்கவுமாய் இருந்தது. இந்நிலைமையில் பேசிய பிராமணர், சேர்மெனையும், மற்றும் சில பிராமணரல்லாத கவுண்சிலர்களையும், வைதுகொண்டே வரும்போது, மற்ற பிராமணர்கள் சிரிக்கும் ஆனந்தத்தில் மூழ்கியிருக்க உபந்யாசகர் முனிசிபல் கவுண்சில்களில் சேர்மெனுக்கு அனுகூலமாயிருக்கும் கவுண்சிலர்களெல்லாம் கைதூக்கும் கழுதைகள் என்று சொன்னார். கூட்டத்திலிருந்த ஒருவர், உடனே அடங்காக் கோபப்பட்டு, உபந்யாசகரை அவமானப்படுத்தவும், தன்புருத்தவம் பிரயத்தனப்பட்டார். அவர் பக்கத்திலிருந்த ஒருவர், அதை தடுத்துப் பக்கத்தில் தேசியக் கொடியும் மகாத்மா காந்தியின் படமும் இருக்கிறது போலிருக்கிறது, உபந்யாசகர்மேல் படுவதினால் நமக்குக் கவலையொன்றுமில்லை; தேசியக்கொடியின் மீது விழுந்தால், பெரிய தோஷமல்லவா, ஆதலால் மீட்டிங்கு கலைந்து வெளியில் வந்தபிறகு நீங்கள் அவரை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொல்லித் தடுத்து விட்டார். மீட்டிங்கு கலைந்தபிறகு, உபந்யாசகர்களுக்குப் புத்திகற்பிக்க வேண்டுமென்று தயாராயிருந்தார்கள். இது விஷயத்தைக் கூட்டத்து அக்ராசனாதிபதி அறிந்து, உபந்யாசகர் இம்மாதிரி இழிதன்மையாய்ப் பேசியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டதின் பேரிலும், மற்றும் சில பெரியவர்கள் பிரயத்தனப்பூர்வமாய் இதை அடக்கியதன்பேரிலும் விஷயம் அவ்வளவோடு நின்று விட்டதாய்த் தெரிகிறது. இதிலிருந்து மகாத்மாவின் பெயரும், அவருடைய கொடியும் எவ்வளவு யோக்கியப் பொருப்பில்லாமல் உபயோகப்படுகின்றதென்றும், காங்கிரஸ் கூட்டமும், காங்கிரஸ் செல்வாக்கும் எவ்வளவு அல்பத்தனமும், நீச்சத்தனமுமான காரியங்களுக்கு உபயோகப்படுகின்றதென்பதையும், கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, பதினாயிரக்கணக்கானபேர் ஜெயிலுக்குப்போய், நூற்றுக் கணக்கான பேர்கள் பிராணனை விட்டு, செல்வாக்கும், பெருமையும் சம்பாதித்த நமது இந்திய தேசியகாங்கிரஸானது, இழி மக்கள் கையிலும், காங்கிரசிற்காக யாதொரு விதமான உதவியும் செய்யாத சுய நலக்காரர்கள் கையிலும் சிக்கிக்கொண்டு, தங்கள் வயிற்றுப் பிழைப்புக்குப்பணங்கொடுக்காதவர்களையும்வையவும்; பிராமணர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு பிராமணரல்லாதாரைத் தூற்றவும் உபயோகப்படுகிறது. இம்மாதிரி ஜனங்கள் உள்ளவரை நமது நாட்டுக்கு விடுதலையென்பது கனவேயாகும்.

ஒரு நிருபர்

அகம்படிய குலத்தினர் கூட்டம்.

எற்கெனவே தெரிவித்தபடி 28-2-26 ஞாயிற்றுக்கிழமை திருத்துறைப் பூண்டியில், தஞ்சை தாலூகா போர்டு பிரசிடெண்டு, ஸ்ரீமான். த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை தலைமையில் இக்குலமகாநாடொன்று நடைபெற்றது. ஸ்ரீமான்கள். தமிழ் பண்டிதர் பாலசுப்பிரமணியம்பிள்ளை, அ. திருஞானசம்பந்தம் பிள்ளை, சதாசிவம் பிள்ளை, இராமசாமி பிள்ளை முதலியோர், குலவரலாறு, வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் குடி அரசு, சங்கத்தின் அவசியம், குல முன்னேற்றம் என்பவைகளைப் பற்றி முறையே பேசினார்கள். பின் இக்குல முன்னேற்றத்திற்காக கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது. வருகிற மே மாதத்தில் திருத்துறைப் பூண்டியில் தஞ்சை ஜில்லா அகம்படிய குலத்தினர் மகா நாடு என்று ஒன்று நடத்த தீர்மானம் செய்யப் பட்டது. இம்மகா நாட்டுக்கு உபசாரணைக் கமிட்டி, சேர்மேனாக ஸ்ரீமான். ஏ. என். வி. நாடிமுத்துப் பிள்ளை அவர்களும் ஸ்ரீமான். சி. இராஜகோபால் பிள்ளை பி. ஏ. பி. எல், காரியதரிசி யாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். சுமார் 40 மெம்பர்களும் சேர்ந்தனர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவு பெற்றது என காரியதரிசி எழுதுகிறார்

பார்க்கவகுல பன்னிரண்டாவது மகா நாடு.

மாகாணப் பார்க்கவர் சங்கத்தின் பன்னிரண்டாவது வருடாந்தரக்கூட்டம், நிகழும் 1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 22, 23-ந் தேதி வியாழன் வெள்ளிக் கிழமைகளில் அதங்குடி ஸ்ரீமான். சாமிநாத உடையார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கும்பகோணம் பார்க்கவர் சங்க மகா நாட்டுக்கொட்டகையில் நடைபெறும். இரண்டு தினங்களிலும் வித்வ மணிகள் பலர் விஜயம் செய்து சொற்பொழி வாற்றுவர். குல முன்னேற்றத்திற்காக ஆக்க வேலை திட்டங்கள் ஆலோசிக்கப்பெறும். தமிழ் நாட்டுத்தலைவர்கள் சிலர் விஜயம் செய்வார்கள் என உபசாரணைக்கமிட்டியார் தெரிவிக்கின்றனர்.

ஊழியர் கழகம் சிக்கல்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள, சிக்கல் தெற்கு வீதியிலுள்ள, ஸ்ரீமான் பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வீட்டில், 1-3-26ல் ஓர் பொதுக்கூட்டம் ஸ்ரீமான். பாலசுப்பிரமணிய பிள்ளை தலைமையில் கூடிற்று. அப்போது "ஊழியர் கழகம்" என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள். கதிரேசம் பிள்ளை, கந்தசாமி முதலியார், பவானி சங்கர தீக்ஷிதர் முதலியோர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி விரித்துரைத்தார். பின் தலைவர், காரியதரிசி, நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இக்கழகத்தார், கதர், அபிவிருத்தி தீண்டாமை ஜீவகாருண்யம், சன்மார்க்க விஷயங்கள் முதலியவற்றில் தலையிட்டுழைப்பார்கள். சந்தனம் தாம்பூலாதிகள் வழங்கி வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது என தலைவர் ஸ்ரீமான். என். பாலசுப்பிரமணிய பிள்ளை தெரிவிக்கிறார்.

திருவாரூர் தேசாபிமானச் சங்கம்,

திருவாரூர் தேசாபிமானச் சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவை, 24—3—26 லிருந்து 28—3—26 வரை தொடர்ந்து ஐந்து தினங்கள் நடத்தப்போவதாகவும், இதில் சகல கக்ஷியினரும் கலந்துகொள்ள அழைப்பதாவும், ஷை சங்க காரியதரிசி அறிவிக்கிறார்.

ஸ்ரீமான். வா. மு. தங்கப்பெருமாள் பிள்ளை காலஞ்சென்றது குறித்து
ஸ்ரீமான். S. D. சுப்பிரமணிய யோகி அவர்கள் பாடிய

இரங்கற் பாக்கள்.

1. திருமயிலைத் திலகரேவோ! தேசபக்த மணியே ஓ! தெய்வம் வாழும்
பெருமனத்துப் பெருமானே! பிறழாத ஊக்கமுடைப் பெட்பினேயெம்
மருவிறந்த மதியுடையாய்! மகிழ்பழுத்த விளந்தமிழின் வரம்பு கண்டாய்
குருமணியே! கண்ணினுருள் கருபணியே! குவலயத்தை விட்டேன் சென்றாய்?

2. நாட்டுநங்கை கதறியழ! நறியதமிழ்த்தாய் புலம்ப! நலமிக்கோங்கும்
வீட்டுமக்கள வெப்பதுயிர்க்க! வீரமினியெனைப் புரப்பார் யாரென்றேங்க!
கூட்டமுத நறுங்குணங்கள் குடிபோக விடமின்றிக் குமைய! நாங்கள்
வாட்டமுற்று நீர்சொரிய! எம்மைவிட்டுச் சென்றனையே! மதியின்வல்லோய்

3. கைபிடித்த காரிகையைக்; கனிவுடையசோதரனை; கவன்றுநிற்கும்
செப்பரிய கிளைஞர்களை; நேசர்களைத், தன்னூரை, தேன்வாசிக்கும்
ஒப்பரிய செழுந்தமிழை, விட்டனை நீ யென்றாலும்; உந்தன் நாட்டை
எப்படி நீ விட்டுவிட மனந்துணிந்தாய் எம்மகத்துளென்றும் வாழ்வாய்

4. மண்ணுட்டு விடுதலைக்கே மிகவுழைத்தாய் மகிழுற நல்வானில் வாழும்
விண்ணுட்டார் விடுதலையில் வாழ்வாராமதைக் காணவிரும்பினையோ
பண்ணுட்டுந் தமிழ்நாட்டைப் பாரதமாம் பெருநாட்டை பண்புசெய்ய
மண்ணுட்டு ளுழைத்தவனென்றங்கவர்களழைத்தனரோ? மாண்பின் மிக்காய்

5. நாட்டுநலமோங்க நம்நாட்டாடை ஒன்றே நற்கருவியென்று
காட்டினை நீ யெக்காலும், காரியத்தும் வேறுபல கருதர்திலதை
நாட்டினை நீ, நற்கதரின் சங்கத்து நாயகமே, நலிந்து தேகம்
வீட்டினேநீ, விடுதலை வாழ்வுற்றனைநீ நின்னையொத்த வீரர் யாரே,

6. பழிவிட்ட நெஞ்சகத்தாய்! பாரதத்தின் விடுதலைக்காய், பாழும் வக்கீல்
தொழில்விட்டாய், செல்வத்தின் தொல்லைவிட்டாய், துச்சமெனவுடலாம் பொய்யின்
எழில்விட்டாய்ச், சிறையுற்றாய், எளியதோர் வாழ்வுற்றாய், என்னே! என்னே!
அழிவுற்றாய் யாருன்னைப்போல நாட்டிற்கு யாவையுமே விட்டாரய்யா.

7. அந்தகனே! அறிவில்லா அந்தகனே! யாதுசெய்தா யறிவின்மிக்க
செந்தண்மைத் திறவுடைய தேசிகனையோ கொண்டுசென்றாய் ஐயோ!
புந்தியொழிந்திட்டாயோ, புகழுறமும் பொய்யாகிப் போனதேயோ
அந்தகன் நீயையமிலை, அடுகறிக்காய்க் கற்பகத்தை யரியலாமோ?

8. நீயிருக்குமிட மெமக்கு நிறைசெல்வ அரண்மனையாம், நீயில்லாபேல்
பேயிருக்கும் வனமாகும், பெரியாய் நீயெம்மை விட்டபின்பு சென்று
போயிருக்கு மிடமெமக்குப் புகலாயோ தாய்நீங்கப் புலம்புகின்ற
சேயிருக்கும் நிலையிருக்கும் எம்மையிங்கு விட்டொழிதல் செம்மையாமோ

9. யாக்கைபதுபோய் விடினுமாத்துமத்தின் வழியெதிலும் நிறைவதாலே
காக்குமது நம்மையெனக் கருத்தினுள்ளே சிறிதாறிக் களிக்கின்றேமால்
நீக்கரிய நின்னுருவை நீக்குவதெப்படி யினிமேல் நீக்கமில்லா
ஊக்கமது அருள் செய்யாய் தங்கப்பெருமாளே யெம்முயிரே போற்றி.

"உத்தமர் உயிர்நீத்தார்"

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலால்,
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற நமது வள்ளுவரின் உயர் திருவாக்கியத்திற் கிலக்கியமாக உதித்த ஒரு சில விழுமியோர் கூட்டத்தில், நம் நண்பரும், தேசபக்தருமான ஸ்ரீமான். தங்கபெருமாள் பிள்ளை அவர்களும் ஒருவர். தனக்கெனவாழாத்தனையரும், பெரியாரும் அவரே; பிறர்க்கெனவாழ்ந்த பெரியாரும் அவரே; தாய் நாட்டன்பிற்றிகழ்ந்தவரும் அவரே; மாய்நாட்பெருமையில் மாய்ந்தவரும் அவரே.

ஸ்ரீமான். பிள்ளையவர்கள் செல்வத்திற் பிறந்து, செல்வத்தில் வளர்ந்தவராயினும், அச்செல்வத்தால் எய்தும் இம்மை இன்பங்களைத் துறந்திருந்தார். மாமியாம் இலக்குமியையும், மருமகளாம் வாணியையும், தமதன்பாற் பிணித்துக்கட்டி, இருவர்கட்குள்ளும் சண்டை பூசலின்றித் தமதகத்தே இருத்திக்கொண்ட வெகு சிலரில் அவரும் ஒருவர்.

"தாய் மொழியிடத்தன்பிலாதொருவன் தாய்நாட்டன்பு கொண்டொழுகலரிது" என்பதை முற்றும் உணர்ந்திருந்தார், நம்பெருமாள். நம் செந்தமிழ்ச் செல்வியிடத்து அவர்கொண்டிருந்த காதல் அளவிடற்பாலதன்று. வேறு வினையின்றி வீணே இருக்குங்காலத்து தன் தமிழ்க் காதலியுடன் சதாகாலம் ஊடிப்பிணங்கி உப்வாடிக்கொண்டிருப்பர். இவர், கல்விச் சக்கிரவர்த்தியாம் கம்பரது இராமாயணத்தில் அதிகம் மையல் கொண்டிருந்தார் என்பது வியப்பையுந் தருமோ!.

இங்ஙனமாக, கல்விப்பெருக்கும், செல்வப்பெருக்கும் தன்பால் தேங்கப்பெற்ற நம் நண்பர் தனதிளவயதிலேயே நாட்டின் விடுதலைப்போரின் முன்னணியில் வந்தார். "ஆட்டினைக்கொன்று வேள்விகள் இயற்றி வீட்டினைப் பெறுவான் விரும்புவோர் சிலரே; நெஞ்சக்குருதியை நிலத்திடைவழித்து வஞ்சகம் அழிக்கும் மாமகம் புரிவம் யாம்," என்று ஒரு காலத்து நம் சத்ரபதி சிவாஜி மன்னன் கூவியழைத்ததுபோல், வெகு சில நாட்களுக்கு முன்னர், கர்ஜித்த நமது காந்தியடிகளின் முழக்கத்திற்கு செவிசாய்த்து, அதனால் ஏற்பட்ட கஷ்டங்கள் யாவற்றையும் அநுபவித்தார்; சிறைக்கோட்டமும் நண்ணினார்; மீண்டும் வெளிப் போந்ததும், ஊக்கமும் உள்வலியுங் குன்றாது தன்தேசத் தொண்டையாற்றி வந்தார். அன்னாரது சாந்தமும், பொறையும், எளிய வாழ்க்கையும், பரந்த நோக்கமும், அளவிலா அன்பும், குறைவிலா ஆர்வமும், யாவரையும் அவரை நேசிக்கச் செய்தன.

முக்கியமாக நம் தமிழ் நாட்டில் கதர் இயக்கம் பரவுவதற்கு காரணஸ்தர்களாயிருந்த சிலருள் நம் தங்கபெருமாளும் ஒருவர். ஒத்துழையா தர்மம் காலைஇளம்பரிதிபோல் ஒளிர்ந்த காலத்தும், பின்னரது காளமேகங்களால் சூழப்பட்டு நாட்டின்கண் இருள் குவிந்த காலத்தும், நம் தேசபக்தர், என்றும் போல் தன் கடமையைச் செய்து வந்தார். கடைசியாக, மண்ணகத்தேயுள்ள மக்களிடம் பாடுபட்டுந் தன் தாய்நாட்டின் சுதந்திரம் கிட்டாதுபோகவே, காலஞ்சென்ற தேசபக்தர்களாகிய தெய்வக்குழாத்துடன் தானும் சேர்ந்துகொண்டு விண்ணகத்தேயுள்ள தேவர்கள்பால் முறையிடப் போயினர்.

அன்னார் ஆன்மா யாண்டும் சாந்தியடைவதாக!.

தி. சதாசிவம்.
திருப்பூர்.

காலஞ்சென்ற

ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை

(நாடெங்கும் அநுதாபக்கூட்டம்.)

கரூர்.

இம்மாதம் 7-ந் தேதியன்று கரூரில் நடந்த பெரிய மகாநாடொன்றில் ஸ்ரீமான் மதலைமுத்து ஆச்சாரியார் தலைமை வகித்தார். திருவாரூர் "நவ இந்தியா," பத்திரிகையின் ஆசிரியர். ஸ்ரீமான் டி.எஸ். தியாகராஜ ஞானியார், காலஞ்சென்ற ஸ்ரீமான். தங்கப்பெருமாள் பிள்ளையின் அரியகுண விசேஷங்களையும், தியாகத்தையும் பற்றிப் பேசி, அநுதாபத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். சபையினர் எழுந்து நிற்க தீர்மானம்நிறைவேற்றப்பட்டது,

(இத்தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

ஆகமத்தின் இரகசியம்.

திருவிழாவின் சிறப்பு தெரியுமா?

பண்டிதர் அ கிருஷ்ணசாமி நாயுடு எழுதியது.

நமது நாடு எத்துறையிலும் பெயர் பெற்று விளங்கினதைப் போன்றே, கோயில்களினும் பெயர் பெற்று விளங்குகின்றது. நமது நாட்டில் கோயில்கள் கோடி கோடி "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்னும் ஔவையார் வாக்கிற்போட்டி போட்டுக் கோயில் கட்டுவோர் கோடா கோடி; இங்ஙனம் கோயில்களுக்குச் செலவிடப்படும் செல்வமும் கோடி கோடி; கோடி கோடியாகச் செலவு செய்வதினும் அமைந்தனரா? இல்லை; இல்லை. அக்கோயில்களுக்கு உண்டாக்கிய திருவிழாக்களுங் கோடி கோடி. அத்திருவிழாக்களுக்குச் செலவு செய்யப் பெறும் செல்வமுங் கோடி. இதனை காண்பதற்கு நாடோறும் செல்லும் மனிதரின் தொகையுங் கோடி கோடி. அதற்குச் செலவிடப்படும் செல்வமும் கோடி கோடி. அதனால் வரும் அல்லலும் கோடி கோடி. எத்துணையோ கோடி இன்னல்களுக்கென்றே, திருவிழாக்கள் நிலைக்களனுயுள்ளன! பழங்காலத்தில் திருவிழாக்கள் உண்டான காரணத்தை யாராய்வோர் யாவர்? இத்திருவிழாக்கள் இவ்வாறான அலங்கோலத்தோடு தொடங்கப்பெற்ற காலம், யாது என்பதனை யாராய்வார் யாவர்.? கோடிக்கணக்காகத் திருவிழாக்களுக்குச் செல்லுகின்றனரே! அவருள் யாரேனும் இதைப்பற்றி எண்ணுகின்றனரு? ஆராய்ச்சியாளர் இதைப்பற்றி ஆராய்கின்றனரா? திருவிழாவென்றால் அனைவரும் குரும்பாடுகளைப்போல் ஓடுகின்றனரே! (இந்தியக் கோயில்களில் கடவுளர்களுக்குக் கழுதை வாகனம் இல்லை; ஏன், இங்கு மனிதர் கழுதையின் பேரில் ஏறிச் செல்லும் வழக்கமின்று. ஐரோப்பாவில் கூச்சமின்றிக் கழுதையின்மேல் ஏறுகின்றனர். இங்கும் இந்தியர் ஐரோப்பியரைப் போன்று கழுதையையும் வாகனமாகக் கொள்ளின் தாங்கள் ஏறும் குதிரையைக் கடவுளுக்கு வாகனமாக வைத்ததைப்போல் கழுதையையும் அமைத்துவிடுவர்.) கடவுளைக் கழுதையின்மேல் வைத்துத் தூக்கிவருவதெனினும் அக்காட்சியைக் காண்போருக்குண்டாகுங் களிப்பு என்னே; என்னே!

இதுகாலை நடைபெறும் திருவிழாக்கள் பழங்காலத்தில் கிடையா. ஆகமங்கள் தோன்றிய பின்னரே, இத்திருவிழாக்களுக்கும், ஆதரவுகள் ஆக்கப்பட்டன. இத்திருவிழாக்களுக்கு ஆதாரங்கள் ஆகமங்கள் என்பதை அறையவும் வேண்டுமோ? இவ்வாகமக் கொள்கையுடையார், ஆகமங்கள் ஆதி முதல் இருந்ததென்றே அறைகுவர். "வேதமுடன் ஆகமம்" என்னும் தொடர்களைக்கொண்டு, வேதம் தோன்றிய பொழுதே, இவ்வாகமும் தோன்றிற்று என்பர். இக்கூற்றை யாராய இது சமயமன்று. வேதம் ஆகமம் எனத்தொடர்ந்து சொல்வதினாலேயே, ஆகமம் வேதத்தைப் போல் பழைய நூலென்று பகரவொண்ணாது. ஆயிரம்வருடங்களுக்கு முன்னர் ஆகமம் என்ற மொழியே தமிழ் நூல்களில் இல்லை; இல்லை. பழைய இந்திய அரசாங்கம் ஒடுங்கி, முகம்மதிய அரசாங்கம் வீறுபெற்று எழுந்த காலத்திலே, இவ்வாகமங்கள் எழும்பின. பின்னர் முகம்மதிய ஆளுகை அடங்கி, இந்து அரசர்கள் தங்களுக்குள் அரசாட்சி வகுத்து ஆளுகை தொடங்கும் பொழுதே, இவ்வாகமும் ஆளத்தொடங்கிற்று. முகம்மதிய அரசாலும், ஆளுகையினாலும் அல்லலுற்றுக்கிடந்த அரசருள்ளத்தினும், குடிகளுள்ளத்தினும் இவ்வாகம வித்துக்களை விதைப்பது மிக எளிதாயிற்று. வெகு விரைவில் இவ்வாகமங்களுக்கும் இவற்றினை உண்டாக்கிய பிராமணர்களுக்கும் அரசரும் குடிகளும் ஆட்பட்டனர்; அவ்வாறு ஆடினர். பௌத்தமதத்தால் ஒழிந்த பிராம்மணர் ஆளுகை, முகம்மதிய ஆளுகையால் மிதித்துத் துவைக்கப்பட்டும் குற்றுயிர் வைத்துக்கொண்டிருந்து, பின்வரும், இந்தியராளுகையில் தலைகாட்டிய வன்மையை என்னென்பது; என்னென்பது. இடைக்காலத்தில் இவ்வாகமங்கள் ஆக்கப்படாமலிருந்தால், இப்பிராமணர்களுக்கு இதுகாலை, வேறு உயர்ந்த பிழைப்பில்லை என்பதை அப்பொழுதே அறிந்த அறிவின் பெருமை என்னே! என்னே!. அழிந்து ஒழிந்துபோன ஆமான பெருமையையும் உயர்வையும் மீண்டும் பெறுவதற்காகப் பிராமணர் கண்டுபிடித்த வழிகளில், இவ்வாகமங்களே சிறந்தவையாகும். இவற்றிற்குத் துணை நின்றன புராணங்களுமாகும்.

இதுகாலை, நடைபெறும் திருவிழாக்கள் ஒவ்வொன்றிற்கும் காரணங்களும், தத்துவார்த்தங்களும் ஆகமங்களிலிருந்து காண்பிக்கின்றனர். கோயிலில் தாசிகள் வேசித்தொழில் செய்வதற்கும், தத்துவார்த்தமுண்டு. சுவாமி பள்ளியறைக்குப் போவதற்கும் தத்துவார்த்தமுண்டாம். இத்தத்துவார்த்தக் குப்பைகளை கிளற வேண்டாம்; கிளறவேண்டாம். அது கிளறிக் கிளக்கின் அம்பட்டர் குப்பையைக் கிளறியதை ஒக்கும்; ஒக்கும். திருவிழாக்கள் ஆயிரக்கணக்காகப் பெருகினதைப் போன்றே, அவற்றின் அலங்காரங்களும், ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவிட்டன. இவ்வாறான அலங்காரங்களுக்கும் தத்துவார்த்தங்கள் கூறுவாருண்டு. ஐந்து தலையுடைய சேஷவாகனத்தின் மேல் கடவுள் பவனிவருவான். ஏனென்றால், "அவ்வைந்து தலைகளும் பஞ்சேந்திரியங்களைக்குறிப்பன; அவ்வைந்தையும் அடக்கி யாளவேண்டும் என்பதற்கடையாளம்," எனத்தத்துவார்த்தம் சொல்லத் தெரியாதா? குரங்கு வாகனம் ஏனென்றால் மனம் குரங்கு; அதை அடக்கி ஆளல் வேண்டும் என்பதற்கு அடையாளம், எனத்தத்துவார்த்தம் கூற முடியாதா? வழியில்லா நிலத்தில் விளைவதை பணம்போனவாறு உண்டு வருபவர்க்கு இவற்றிற்கெல்லாம் தத்துவார்தம் கூறல் அருமையா? அருமையா? இவற்றையன்றி "வேறு வேலையும் என்? இத்தத்துவார்த்தங்களுக்கு நம்மரசரும் மயங்கினரே! மக்களும் மயங்கினரே!

திருவிழாக்களில் கடவுளுக்கு அலங்காரத்திற்காகக் கூறப்படுங் காரணங்கள் விந்தை, விந்தை. கையில் கடகமிடுவதற்கும், கால்களில் கழல் கட்டுவதற்கும்; முடியில முடியணிவதற்கும் பிறவற்றிற்கும் பலப்பல காரணங்கள் பகரப்படுகின்றன. அவையனைத்தும் வெறும் யூகமேயன்றி வேறன்று. சுருங்கக்கூறின், அரசரும் மற்றவரும் தாம் தாம் நுகர்வதற்கு எவ்வெவ் போகப்பொருள்கள் உண்டோ, அவையனைத்தும் கோயிலில் கடவுளுக்கும் வேண்டுமென்று அமைத்தனர். கோயில் திருவிழாச் சிறப்பு முழுவதும் அரச வைபவமே; அரசகோலமே; அரசபோகமே. அரசன் ஏறுவதற்குத் தேர் வேண்டுமென்றால், கடவுளுக்கும் தேர் வேண்டும்; அரசனுக்கும் வேசி வேண்டுமென்றால், கடவுளுக்கும் வேசி வேண்டும்; மக்கள் மணம் செய்வதென்றால் கடவுளுக்கும் மணம் வேண்டும்; இவர்களுக்கும் சாந்தி முகூர்த்தம் என்றால், பகவானுக்கும் சாந்தி முகூர்த்தம் வேண்டும். இங்ஙனம் எவ்வெவ்வகையில் மனிதர் போகம் நுகர்கின்றார்களோ, அவ்வவ்வகையனைத்தும் ஆண்டவனுக்கும் அமைத்துவிட்டனர். இவ்வாலாறே திருவிழாவின் வரலாறு.

இவ்விழாக்களின் அலங்காரங்கள் இதுகாலை கணக்கிலடங்கா. ஆடம்பரங்கள் அளவிலடங்கா, கொழுத்த வருமானமுள்ள கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு அயல் நாட்டிலிருந்து மருந்து வேடிக்கைகளும் பிற களியாடல்களும் வந்து குவிகின்றன. அலங்காரங்களும், அயல் நாட்டு அலங்காரக்கோலங்களாயின. அந்தோ! இம்மானிடர் எங்ஙனம் அயல் நாட்டு வேடத்திலும், நாகரிகத்திலும் முழ்கி மயங்கினரோ, அங்ஙனமே ஆண்டவன் திருவிழாவிலும் செய்யவேண்டுமென்று மாழ்கினரோ? பழங்காலத்தில் வெறும், கல், மண், பொன், செம்பு, முதலிய சிலைவடிவாக அமைந்த ஆண்டவனின் இயற்கைக் காட்சியைக் காணப்பெறும் நல்லூழ் அழிந்தவராய், செயற்கைக்கோலங்கள் செய்து காணக் காப்புக்காட்டினர், கட்டுகின்றனர். இச்செயற்கைக் கோலங்களால் விளைந்த இன்னலை இயம்பவும் ஒண்ணுமோ? அதனால் நாடு நலனழிந்து அடிமைக்குழியில் விழுந்து புரண்டுகொண்டிருக்கின்றதே! இச்செயற்கைக்கோலம் செய்தோர் இதனோடும் நின்றனரோ? முன்பு வெண்மை, சிகப்பு, நீலம் முதலிய கற்களால் மாலைகள் இயற்றி இறைவனுக்கு அணிந்தனர். இப்பொழுது அம்மாலைகளை மாற்றி ஆண்டவனுக்கு அம்மாலைகள் அணியும் இடங்களில் மின்சார விளக்கு மாலைகள் அணிகின்றனர். தமிழ்

நாட்டில் முதன் முதல் சென்னையம்பதியில் கந்தகோட்டக் கந்தசாமி கடவுளின் திருவிழாவில், கந்தசுவாமிக்கு மின்சாரம் ஏற்றிய விளக்குகளை மாலைகளாகவும், பிற அணிகளாகவும் அலங்காரம் செய்து ஊர்வலம் ஊர்வித்தனர். இச்செய்தி நாடெங்கும் சென்றது. அங்ஙனமே பல கோயில்களிலும் ஆரம்பமாகியுள்ளன. சென்ற மாதம் சென்னிமலையம்பதியில் நடந்தேறிய திருவிழாவில் இம்மின்சார விளக்கு மாலைகள் கடவுளுக்கு அணியப்பெற்றதும், அதனால் உண்டாகிய பூசல்களும் புகலவொண்ணுமோ? அக்கோயிற் பூசாரி பிராமணன்; வேறு காரணத்தை முன்னிட்டு ஆகமத்தின் பேரைச்சொல்லி தடுத்து விட்டனன். எனினும், அவ்வலங்காரத்துடன் ஆண்டவன் பவனி நடந்தேறியது. பாவம், அப்பார்ப்பனர் இவ்வலங்காரங்களுக்கும் ஆகமத்தில் விதியுள்ளதென்று விளம்பி, அதற்கு வேறு இறையிலி நிலம் [மானிய நிலம்) பெறுவதற்கு மறந்துவிட்டானே யென்று பெரிதும் வருந்துகின்றேன். பொறாமையினால் ஏற்பட்ட கெட்ட எண்ணம் பலிக்காமல் போய் விட்டது, என் செய்வது?

நிகழ்காலச் செயற்கை நாகரீக நாகம் யாரைத் தீண்டாமல் விடுகின்றது; மனிதரைத் தீண்டிற்று; மாள்கின்றனர். ஆண்டவனைத் தீண்டிற்று; அடிமையாயினர். இத்துணைச் செயற்கைக் கோலங்கள் செய்தா கடவுளை வழிபடல் வேண்டும்; கும்பிட வேண்டும்; கூத்தாடவேண்டும். மின்சார விளக்கு அலங்காரம் செய்துள்ள ஆண்டவன் காட்சியைக்கண்டு, கண்டு கண்ணீர் பெருக்குகின்றனர்; கன்னத்தில் அறைந்து கொள்ளுகின்றனர்; துள்ளுகின்றனர்; துடிக்கின்றனர். எதற்கு இத்தனை ஆரவாரங்கள் செய்கின்றனர்; மின்சார விளக்கின் செயற்கை அலங்காரங்களுக்கா? வேறு ஆண்டவனின இயற்கை வடிவத்தின் அழகில் ஈடுபட்டா? அவ்வலங்காரங்களும் ஆரவாரங்களும் இல்லையேல் திருவிழாவிற்குச் செல்லுவோர் யார்? சொல்லுவோர் யார்? செயற்கை நாகரீகச்சேற்றில் புரளுகின்றனர்; அதின் புழுக்களுக்கு இரையாகின்றனர். இச்செயற்கை நாகரீகம் கோயில்களிலும் திருவிழாக்களிலும் புகுந்துவிட்டதே எனப்புத்தி புழுங்கிப் புழுங்கிப் பொங்குகின்றதே! இடைக்கால ஆகம வழிபாடுகள் அழிந்து பழங்காலத் தமிழ் வழிபாடுகள் தழைக்கும் நாள் எந்நாளோ! இயற்கை வடிவில் இறைவனை வழிபட்டுக் காலத்திற்கியன்ற திருவிழாக்கள் செழிக்கும் நாள் எந்நாளோ! கோயில் பூஜைக்கும் பரம்பரைப் பாத்தியம் பாழாகும் நாள் எந்நாளோ! பூசாரிகள் பிராமணரே என்றைக்கும் உரியவர் என்பது ஒழியும் நாள் எந்நாளோ! அந்நாளே நம் நாடு நலம் பெறும் நாள்; சமயச்சண்டை சாகும் நாள். சாதிச்சண்டை சாயும் நாள்; சமத்துவம் தழைக்கும் நாள், எக்குலத்தவரும் வேற்றுமையின்றிக் கோயிலில் சென்று கும்பிடும் நாள். ஆண்டவனே. அந்நாளை விரைவில் அருள்க; அருள்க.

சென்னை
சித்த வைத்திய சங்கத் தரும வைத்தியசாலை திறப்புவிழா.

இது 21—2—26 ஞாயற்றுக்கிழமை காலை 9-மணிக்குச் சூளையை அடுத்த நம்மாள்வார் பேட்டை என வழங்கும் உப்பர பாளையம் சுப்பராய செட்டித்தெருவில், தனி இல்லத்தில், தமிழ் நாட்டின் விடுதலைப்போரில் தலை சிறந்து விளங்கும் வீரராகிய, திருவாளர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமையின்கீழ் தமிழ் நாடு பத்திரிகை ஆசிரியர் முதலிய பலரும் பாளையத்திலுள்ள ஜமீன்தார், கண்ட்ராக்டர்கள் முதலிய பலருங்கூட, முதலில் தமிழ் மறை நல்லிசையிலோதப் பெற்றது. ஸ்ரீமான் நாயுடு அவர்களை தலைமை வகிக்க வேண்டுமென்று விரும்பியதற்கு இணங்கி பெருத்த கர ஓசைக்கிடையில தமிழ் மொழியில் முன்னுரையாகச் சில நன்மொழிகளால் நாம் நமது நாட்டுக்கும் வெப்பதட்பங்களுக்கும் இசைந்தவாறு, சித்தர்களால் வெளியிட்டுக் கையாண்டு வருகின்ற வைத்தியத் தினைபோற்ற வேண்டிய கடமையாயினும், இந்த உலகம் நன்மையடையவேண்டினால் துறவிகள் கையிலேயே அது இருக்கின்றது. காரணம் என்னவெனில் தங்களுக்கென்று பெரும் பொருள் திரட்டவேண்டிய அவசியமில்லை; அவர்கள் தேடும் பொருட்கள் யாவும் பொது நன்மையின் பொருட்டேயாகும். அவ்வாறே ஸ்ரீமத் சண்முகானந்த சுவாமிகளின் முயற்சி மிகவும் போற்றத்தக்கதே. இத்தகைய காரியத்தில் எனக்கு மிகுந்த அன்புண்டு. ஆனதால், இந்த வைத்தியசாலை நாளடைவில் விருத்தியடைந்து யாவருக்கும் நன்மை புரியவேண்டிக் கடவுளைத் துதித்துத் தொழுது, வைத்தியசாலையைத் திறந்து வைக்கிறேன் என்றார். உடனே சித்தர்கள் தலைவனும், செவ்வேட் குமரன் சேவடி பரவி கற்பூரங்காட்டிப் பிரசாதம் பெற்று, தமது பீடத்தமர்ந்து சுவாமிகளை பேசுமாறு கேட்டுக்கொள்ள, அவ்வாறே சுவாமிகள கடவுளைத் தொழுது ஸ்ரீமத் சண்முகாநந்த சுவாமிகள் நாடும் வைத்தியமும் என்ற பொருள்பற்றி தமிழில் ஓர் விரிவுரை விரிவாக நிகழ்த்தினார்கள். அதன் கருத்தாவன:— சகோதரர்களே! நாடு என்பது பல நாட்டவரும் நாடுவது நாடு; அல்லது தன்னாட்டவர்களுக்கு விரும்பிய பொருட்கள் பலவற்றையும் வற்றாது கொடுப்பது நாடு. என்ற பொருளை (நாடா வளர்த்தது நாடு) என்றார். ஆசிரியர் திருவள்ளுவனார். அத்தகைய நாடு நமது நாடே. அதாவது இந்தியாவே. அதிலும் இந்தியா வென்ற உடலுக்கு முகம் போன்றது தமிழ் நாடே. காரணம், பற்பல துறையிலும் கைதேர்ந்த பெரியோர்களால் தமிழ் மொழியும், இலக்கணமும், மந்திரமும், இசையும், வைத்தியமும், பிறவும் செய்யப்பட்டுள்ளது. அப்பெரியார்களையே நாதாக்கள், நாதர், சித்தர் என்று கூறுவது மரபு. அவர்களே தென்றமிழ் நாட்டுத் தலைவர்கள். அவர்களால் வகுத்தருளிய நூற்களே நமக்கு வேதம் ஆகும். வேதத்தில் பற்பல கருத்துக்கள் மறைந்திருப்பது போலவே, சித்தர் நூற்களிலும் வாதம், வைத்தியம், கற்பம், யோகம், ஞானம் முதலியவை மிளிர்கின்றன. அந்த கருத்துக்களை ஒருங்கு திரட்டி கோவை செய்ய ஞானப் பகுதியே சித்தாந்தம் என்பது. இதனை (சித்தர் சொன்னது சித்தாந்தம்) என்னும் வசனம் வலியுறுத்தும். நிற்க, ஆரியர்கள் இமயமலை கடலிலிருந்து வெளிக்கிளம்பிய பிறகே, இந்தியாவுக்குள் வந்தனரெனவும், வந்த காலத்தில் இந்நாட்டு மக்களின் வழக்கங்களைக்கண்டு பாடிய பாடல்களை இருக்குவேதத்தில் இப்போதுங்காணலாம். இதனால் தமிழர்கள் மிகப்பழைய காலந்தொட்டே உடல் நலம் பேணியும், உயிர் வளர்ச்சியாகிய மெய்யுணர்வும் பெற்றும், பல்லாற்றானும் சிறந்த நாகரீகத்துடன் வாழ்ந்தவர்களே தமிழர்கள். இவர்கள் வசித்த நாடே தமிழ் நாடு. இவர்கள் பேசிய மொழி தமிழ். இவர்களின் பெரியார் சித்தர். இவர்களுக்குச் சாதிப்பிணக்கென்பது கிடையாதென்பதை தாயுமானார் (மெய்த்த குலங் கல்வியொடு வேடமெலாம் ஓட்டவிட்ட சித்தர்) என்று கூறியுள்ளார்கள். மருந்து, மணி, மந்திராதிகளால் உடல் இறவாத சித்தியும், அதுவும் உருவம் உருவாருவம், அருவம் என்னும் மூவகைச்சித்தியும் பெற்று, என்றென்றைக்கும் குமரனாக விளங்கும் பெரியார். உதாரணமாக (விருத்தர்களும் பாலராவர்) என்றும் (பதினாறு மாற்றுப் போல் பாலனு மன்றேகம்) என்றும், (மாற்றுவயதிற்காம்) இக்கொள்கைக்கே சித்தயோகமென்றும் கூறுவது. மருந்தில்லாத யோகம் ஆரியர் யோகமாம். அதன் பெயர் வைதீகயோகம், என்று பெயர். இத்துடன் நாடும், மொழியும், யோகமும், பெரியாரும் கூறினும், இதில் இடைக்காலத்தில் தோன்றிய ஆச்சாரிமாரையும், பிறரையும் நம்பிச் சித்தர்களை மறந்தகாரணத்தாலே, நாமும் நமது நாடும் வருந்தும்படி நேர்ந்தது என்றறியவும். நிற்க, வைத்தியம் என்பதைப்பற்றிக் கூறுவாம். சாதாரண மனிதர்கள் எவராலும் எக்காலத்தும் எவ்வித இடையூறுகளின்றி நிலைத்து வைத்துக்கொள்ள வியலாத உடலினை, மேற்கூறிய தடைகளின்றி நிலையாக வைத்துக்கொள்வதோடு, இயல் தடையின்றி நடை பெறச்செய்யும் உளவினைக்கூறுவதே வைத்திய மென்றார் திருமூலர். அது (வைத்தியச்செயல்) வைத்தியமாமே என்பதாம். இக்கருத்தினாலன்றோ ஒழிவிலொடுக்க நூலாரும் (மாமருத்து வன் பிணித்தீது) என்று கூறினார். அன்றியும், மருந்துக்களின் மேலான தன்மையாலன்றோ மருத்துவமென்றார். அங்ஙனமாயின் மருந்து என்பது, மருப்பது மருந்து என்ற கருத்து விளங்கவே (மருப்பதுடனே மருந்தெனலாகும்) என்றார். அன்றியும் இம்மருத்தலை நான்கு வகையாகவும் கூறுவதுண்டு. அது வருகின்ற நோய்களை மருப்பது; உள்ள நோய்களை மருப்பது; என்றென்றைக்கும் நோய் வராது மருப்பது;

(இத்தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க).



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-௵ பங்குனி-மீ க-உ

ஓட்டர்களை ஏமாற்றும் தந்திரம்.

இவ்வாரம் பத்திரிக்கைகளெல்லாம் ஒரே மூச்சாய் சுயராஜ்யக்கக்ஷியார் சட்டசபைகளை விட்டு வெளியேறிவிட்டார்கள், வெளியேறிவிட்டார்களென்று, சுயராஜ்யக்கக்ஷியாருக்காக வருஞ்சுட பிரசாரங்கள் செய்து வருகின்றன. சுயராஜ்யக்கட்சியார் எப்பொழுது விலகினார்கள்? எதற்காக விலகினார்கள்? எவ்வளவு நாளைக்கு விலகியிருப்பார்கள்? விலகியபின் இவர்களுடைய வேலை என்ன? இந்த நான்கு விஷயங்களையுங்கவனித்துப் பார்த்தால் சுயராஜ்ஜியக் கட்சியாரின் தந்திரம் பொது ஜனங்களுக்கு விளங்காமற் போகாது.

எப்போது விலகினார்கள்?

இருக்கவேண்டிய நாளெல்லாம் இருந்துவிட்டு, அடையவேண்டிய பெருமையையும், உத்தியோகத்தையும், பணத்தையும், தங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகத்தையும் சம்பாதித்துக்கொண்டு கடைசியாய் சட்ட சபை வேலையெல்லாம் முடிந்து, காலாவதி முடிய, ஒரு வாரமிருக்கும்போது விலகிவிட்டோம்! விலகிவிட்டோம்!! என்று ஆடம்பரம் செய்கிறார்கள்.

எதற்காக விலகினார்கள்?

விலகிவிட்டோமென்று பொது ஜனங்களை ஏமாற்றி, மறுபடியும் தங்களுக்கே வோட்டுப்போடும்படி செய்து, மறுபடியும் தாங்களே போய், முன்னிலும் பலமாய் உட்கார்ந்து கொள்ளுவதற்காக விலகினார்கள். அல்லாமல் தங்களுடைய காரியமொன்றும் பலிக்காததினால், தங்களுக்கே வெட்கம் வந்தோ, அல்லது சர்க்காருக்கு ஒரு உணர்ச்சி உண்டாவதற்கோ விலகினவர்களல்ல.

எவ்வளவு நாளைக்கு விலகியிருப்பார்கள்?

அடியோடு ஒன்றும் ராஜி நாமா கொடுத்து வெளியில் வந்தவர்களல்ல-மறுபடியும் நாளைக்கு வேண்டுமானாலும் இவர்கள் போவதற்கு இடம் வைத்துக்கொண்டு தானிருக்கிறார்கள். மறுபடியும் உள்ளே போய் மூன்று வருடம் உட்கார்ந்து, பதவியும், உத்தியோகமும், பணமும் சம்பாதித்துக்கொள்ள சவுகரியம் கிடைக்கிற வரையில் தான் வெளியிலிருப்பார்கள்.

விலகின பின் இவர்களுடைய வேலை என்ன?

வோட்டர்களிடம் போய், நாங்கள் வெளியில் வந்து விட்டோம்; எங்களுடைய வீரப்பிரதாபத்தைப் பார்த்தீர்களா? ஆதலால் எங்களை மறுபடியும் அனுப்புங்களென்று வோட்டர்களை ஏமாற்றுவது தான் இவர்களுடைய முக்கிய வேலை. இவர்களின் நிலையோ சட்டசபையை விட்டு வெளியேறுங் காலத்தில், கக்ஷித்தலைவர் பண்டித நேரு சொல்லியதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

"சர்க்காரை நாங்கள் பயமுறுத்த வில்லை. சர்க்காருக்கு மகத்தான அதிகாரங்கள் உண்டு. சர்க்காரை எதிர்க்கத் தகுந்த பலம் எங்களிடம் கிடையாது. தேசத்தில் சமூக வேற்றுமை ஏற்பட்டு, ஒற்றுமை குலைந்திருக்கிறது. ஆதலால் சட்ட மறுப்புச்செய்ய எங்களால் ஆகாது. இந்த நிலைமையில் சட்டசபையில் நாங்களிருப்பதில் பிரயோஜனமில்லை. இவ்வளவு பலமுள்ள பெரிய சர்க்காரை ஒழித்து விடும் நோக்கத்துடன் நாங்கள் வெளியே போக வில்லை. நாங்கள் ஆசைப்பட்டாலும், அது ஆகிற காரியமல்ல. எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும், எங்கள் நோக்கங்களை அடையமுடிய வில்லையென்றே வெளியே போகிறோம். வெகு நாளைக்கு முன்னமேயே, நாங்கள் சட்டசபையை விட்டுப் போயிருக்க வேண்டும். சர்க்காருடைய தந்திரம் எங்களை ஏமாற்றிவிட்டது. ஆதலால் நாங்கள் இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை. போய் வருகிறோம்" "என்று சொல்லியிருக்கிறார். இது உண்மையான விஷயம். ஆனால் ஒரு கக்ஷியார் இந்த உண்மையை அறிந்து இந்த தத்துவத்திற்காக வெளியானது உண்மையாய் இருந்து அவர்களுக்கு சுயமரியாதையும் யோக்கியப்பொருப்பும் இருக்குமானால் மறுபடியும் தாங்கள் விட்டு வந்த சட்டசபையை திரும்பிப் பார்ப்பார்களா? மற்றவை மறு முறை விபரமாய் எழுதுவோம்.

பிராமணர்களுக்கு ஒரு கை ஒடிந்தது.

மந்திரிகளுக்கு ஒரு உபத்திரவம் ஒழிந்தது.

(சித்திர புத்திரன் எழுதியது.)

சென்னை சட்ட சபையில் கொழுத்த சம்பளம் பெரும் மந்திரிகளை பொறாமை கொண்டு வேண்டுமென்றே உபத்திரவப்படுத்த நமது பிராமணர்களுக்கு ஸ்ரீமான்கள் C. ராமலிங்க ரெட்டியார் அவர்களும், A, ராமலிங்க செட்டியார் அவர்களும் வலக்கை இடக்கை போல் கொஞ்சக்காலமாய் இருந்து வருகிறார்கள். இதில் ஸ்ரீமான் ரெட்டியாருக்கு மாதம் 2000 ரூபாய் சம்பளத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டது இதனால் பிராமணர்களுக்கு ஒருகை ஒடிந்ததென்று தான் சொல்லவேண்டும், மந்திரிகளுக்கும் ஒரு உபத்திரவம் குறைந்தது என்று தான் சொல்லவேண்டும். இது போலவே நமது ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கும் ஒரு உத்தியோகம் ஏற்பட்டுவிட்டால் பிராமணர்களின் மற்றொரு கையும் தற்கால சாந்தியாய் ஒடியும். மந்திரிகளின் முழு உபத்திரவமும் நீங்கிப்போகும். மந்திரிகளின் அறியாமையினால் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை மந்திரிகள் நழுவவிட்டுவிட்டார்கள். அதாவது சட்ட சபை பிரசிடெண்டு உத்தியோகத்தை செட்டியாருக்கு கொடுக்க தவறிவிட்டது தான். இதை மந்திரிகளின் மன்னிக்க முடியாத குற்றமென்றுதான் சொல்வேன். இவ்விருவருக்கும் தயவுக்காக யாரும் உத்தியோகம் கொடுக்கவேண்டியதில்லை. இருவரும் அந்தந்த ஸ்தானங்களுக்கு மிகவும் பொருத்தமானவர்கள்—உரியவர்கள் என்றே சொல்லுவேன். (அந்த ஸ்தானங்கள் பொது மக்களுக்கு உபயோகப்படக்கூடியதா அல்லவா என்பது வேறு விஷயம்,) அவரவர் உரிமை அவரவர்களுக்கு அளிக்கப்படாவிட்டால் விதியை எதிர் பார்த்து பொறுமையுடனிருந்து பெருவோர் சிலர், விதியையும் பொறுமையையும் வீதியிலெறிந்துவிட்டு யுத்தம்செய்து பெருவோர் சிலர். அவ்வித யுத்தம் சிலர் தரும வழியில் செய்வார்கள்; சிலர் அது நீங்கிய வழியில் செய்வார்கள். ஆனால் நமது மந்திரிகள் இவர்களின் தர்ம யுத்தத்திற்கு மடங்காத மந்திரிகளாய்ப் போய்விட்டதால் பிராமணர்களோடுசேர்ந்துகொண்டு யுத்தம்புரியவேண்டியதாயிற்று-வேண்டியதாயுமிருக்கிறது. ராமாயணம் என்னும் கதைப்படி ராமரே தனது உரிமையைப்பெற "ராக்ஷதர்களில் ஒருவரான விபூஷணனுடன் ஒப்பந்தம் பேசிக்கொண்டு அவனை ஆழ்வாராக்கி இராவணனோடு சண்டை செய்ய வேண்டியிருந்ததென்றால், நமது ஸ்ரீமான்கள் ரெட்டியாரும் செட்டியாரும் பிராமணர்களோடு சேர்ந்துகொண்டு அவர்களை தலைவர்களாக்கி உரிமை பெறுவது தப்பாகுமா? சரியோ—தப்போ தமிழ் மந்திரி பதவியின் முதல் சந்தர்ப்பத்தை ஸ்ரீமான் செட்டியாருக்கு கொடுத்திருக்கவேண்டியது கிரமமானதாகும். செட்டியாரின் அவசரமும் மந்திரிகளின் வீம்பும் இக்கிரமத்திலிருந்து தவறும்படிசெய்து விட்டது. இவர்கள் இருவரின் தலருதல்கள் தமிழ்மக்களை பெரிதும் துன்பத்திற்காளாக்கப்போகிறது. ஆகையால் இனியாவது மந்திரிகள் ஸ்ரீமான் செட்டியாருடன் ராஜி பேசிக்கொண்டு அந்த உபத்திரவத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள வழிதேடவேண்டியது. இல்லாவிட்டால் "குடிக்க முடியாமல் போனால் கவிழ்த்தவேண்டியது" என்கிற தத்துவம் தலை சிறந்து விளங்கும் ஆத்துத் தண்ணீரை அப்பா குடி அய்யா குடி என்று சொல்லவேண்டியதுதான்.

ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிப்பாலிட்டியின் சேர்மென் நடத்தையைப்பற்றி, கவுன்சிலர்கள் அடிக்கடி கோர்ட்டுகளுக்குப்போக ஏற்பட்டதைப் பற்றியும், அரசாங்கத்தாருக்கு அடிக்கடி புகார்கள் போய்க்கொண்டிருப்பதுபற்றியும், இதற்கு முன் பல தடவைகளில் குறிப்பிட்டிருக்கின்றோம், இவற்றில், சிங்காரவன விஷயமாக நிறைவேறின ஓர் ஒழுங்கான தீர்மானத்தை விட்டு விட்டு, நிறைவேறாத ஓர் தீர்மானத்தை, நிறைவேறியதாக கெட்ட எண்ணங்கொண்டு பொய்யாகவும், அக்கிரமமாகவும் நடவடிக்கைப் புத்தகத்தில் பதிந்துகொண்டார், என்கிற காரணம் கொண்டு ஸ்ரீமான்கள். கே ஏ. ஷேக்தாவூத்சாயபு, மு ச.முத்துக்கருப்பன் செட்டியார் முதலியவர்கள், இத்தீர்மானம் நிறைவேற்ற வொட்டாதபடி தற்காலத் தடை உத்திரவு பெற்றிருந்த விஷயம் நேயர்களறிந்திருக்கலாம். அதன் பிறகு இதே சேர்மன், ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார், முனிசிபல் பண விஷயங்களில் நாணயமாய் நடந்து கொள்ளவில்லையென்பதாக பல புகார்கள் அதிகாரிகளுக்கு எட்டியிருப்பதன் பலனாய், சிவில் கோர்ட்டு விவகாரங்களை ராஜி செய்து கொள்ளவேண்டியது சேர்மனுக்கு அவசியமாய்ப் போய் விட்டது. அதை முன்னிட்டே தற்காலம் கோர்ட்டிலிருக்கும், பொய்த்தீர்மான விவகாரம், ராஜி செய்து கொள்ள ஏற்பாடாகி விவகாரத்துக்கு ஆதாரமாயிருந்த தீர்மானத்தை நடவடிக்கைப் புஸ்தகங்களிலிருந்து எடுத்து விடுவதற்காக, ஓர் கூட்டம் கூடி, அந்தக் கூட்டத்தில் எடுபட தீர்மானிக்கப்பட்டு விட்டது. அத்தீர்மானமாவது:—

“2-11-25 ந் தேதி முனிசிப்பல் மீட்டிங்கில் நிறைவேறியதாகச் சொல்லப்படும் ஓர் தீர்மானமானது அது உண்மையிலேயே நிறைவேறவில்லையென்கிற காரணத்தால், சில கவுன்சிலர்களுக்குள்ளாகவே உரசல் ஏற்பட்டதோடு, முக்கியமாய் முனிசிபல் நிர்வாகத்திற்குக் கேடாய் இருப்பதால் நடவடிக்கைப் புஸ்தகத்திலுள்ள ஷை தீர்மானத்தை மறைந்து போகும்படி அடித்து விட வேண்டியது”. என்று முனிசிபாலிட்டியிலுள்ள பூரா கவுன்சிலர்களும் ஆஜராகி ஏக மனதாய்த்தீர்மானிக்கப்பட்டது. சேர்மன் அவர்கள் இத்தீர்மானத்தின் வாசகம் ரொம்பக்கடுமையாயும், தனது நாணயத்தைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கிறதென்று எவ்வளவோ சொல்லியும், கவுன்சிலர்கள் அதுதான் உண்மை யென்று ஒரே பிடிவாதமாய் அப்படியே நிறைவேற்றினார்கள் இதன் பலனாய் முனிசீப் கோர்ட்டில் இப்போது நடைபெற்று வரும் விவகாரம் பின் வாங்கிக்கொள்ளப்படும்.

இப்பணப்புழக்கமான விஷயங்களைப் பற்றிப் பின்னர் விரிவாயெழுதுவோம்.

நமது நாட்டில் முனிசிப்பல் நிர்வாகமானது சிற்சில இடங்களில் மிக்க கேவலமாயும், நாணயக்குறைவாயும் நடைபெறும் விஷயங்கள் அரசாங்கத்தாருக்குத் தெரிந்திருந்தும், அலக்ஷியமாயிருந்து வருவதினால், முனிசிபல் நிர்வாகிகள் என்னவேண்டுமானாலும் செய்யத்துணிந்து விடுகிறார்கள். சர்க்காரார் சிறு விஷயங்களையே கவனித்துத் தகுந்தபடி எச்சரிக்கை செய்திருப்பார்களானால், அநேக பெரிய குற்றங்கள் நேரிடுவதற்கே வழியில்லாமற் போயிருக்கும். முனிசிபல் இலாகாவுக்கும் கெட்ட பெயர் ஏற்படவும், குற்றம் சொல்லவும் இடமில்லாமலிருந்திருக்கும். இனியாவது மந்திரிகள் கவனித்து தக்கது செய்வார்களென்று நினைக்கிறோம். இவ்விஷயம் மந்திரிகள் ஞாபகத்திற்குக் கொண்டு போகவேண்டுமென்று, நாம் இது வரையில் நினைக்கவேயில்லை. ஆனால் நிலைமை நாளுக்குநாள் ரொம்பவும் கேவலப்பட்டு வருவதோடு வெறு வாயை மென்று கொண்டிருக்கும் நமது மந்திரிகளின் எதிரிகளுக்கு, அவல் கிடைத்தது போலாகுமென்றே இதைக் குறிப்பிடுகிறோம்.

தென்னாட்டு பிராமண சக்தி

பிராமண மந்திரிகள்வந்தால் பூரணகும்பமும் உபசார பத்திரமும்— பிராமணரல்லாத மந்திரிகள் வந்தால் கருப்பு கொடியும் கதவடைப்பும்.

(ஜனங்களை ஏமாற்றுதல்.)

மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்து சர்க்காரால் அளிக்கப்பட்ட பட்டங்களை விட்டு விடுங்கள்; வக்கீல் வேலையை விடுங்கள்; என்று சொன்ன காலத்தில், அதற்கு முன் நாங்கள் தான் உண்மையான தேசிய வாதிகள், ஜனங்களுக்கு நாங்கள் தான் உண்மையாக பாடு பட்டு தேசத்திற்கு நலம் தேடுகிறவர்களென்று காங்கிரஸ் பெயரைச் சொல்லி, ஜனங்களை ஏமாற்றி தங்கள் சுய நலத்தை நாடிக் கொண்டிருந்த அய்யர், அய்யங்கார், வக்கீல் கோஷ்டியார், ஒன்றுக்கும் உதவாத ராவ்சாஹிப் ராவ்பஹதூர் பட்டங்களை விடாமலும், மூட்டைப் பூச்சிபோல் ஜனங்களுடைய ரத்தத்தை உறிஞ்சக்கூடிய வக்கீல் தொழிலையும் விடாமலும், தந்திரமாக இயக்கத்திலே சம்பந்தப்படாமல் ஒதுங்கிக்கொண்டார்கள். இவர்கள் உண்மை வேஷத்தை எல்லாரும் அறியும்படி செய்த காந்தி அடிகளுக்கு பாரத நாடு என்றென்னும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. பிறகு ஒத்துழையாமை மறையவே, மறுபடியும் அய்யர், அய்யங்கார், வக்கீல் கோஷ்டியார், பொது மேடைகளில் காங்கிரஸ் பெயரைச் சொல்லி நாடகம் நடிக்க ஆரம்பித்து விட்டார்கள். சுயராஜ்யக்கக்ஷி தோன்றியவுடன் பெரும்பாலோர் அதில் போய் சேர்ந்து கொண்டு, சட்டசபை தேர்தல் காலங்களில் நாங்கள் சர்க்காரை துரும்பாக மதித்து எதிர்த்து போராடி சட்டசபைகளைச் சின்னா பின்னமாக்கி விடுவோம்; எவ்வளவு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்த போதிலும் அவர்களை பஹிஷ்காரம் செய்வோமென்று பறை சாற்றி, ஜனங்களை ஏமாற்றி, சட்டசபைக்குள் சென்றபின், இதரகக்ஷியார்களைப் போலவே உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டு, படியும் பெற்றுக்கொண்டு சிலர் தங்கள் பிள்ளைகளுக்கும், சுற்றத்தார்களுக்கும் அவர்கள் அந்த உத்தியோகங்களுக்கு லாயக்கில்லாமலிருந்த போதிலும், தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி பெரிய பெரிய உத்தியோகங்களை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இப்படி இருக்க 1920-ம் வருஷத்தில் சென்னை சட்டசபைத் தேர்தல் நடந்த காலத்தில் சென்னை நகரத்திற்கு உரித்தான முகம்மதியரல்லாத நாலு ஸ்தானங்களில், ஒன்றுக்கு அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டிக்கு காரியதரிசியாக இருந்த இப்பொழுது ‘சர்’ பட்டம் பெற்றிருக்கும் ஸ்ரீமான். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் தான், தான் உண்மையான ஜன ஊழியனென்று வானம் பிளக்க சப்தமிட்டுப்பகிரத பிரயத்தனம் செய்ததின் பலனாக, ஜனங்களால் இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பெற்றார். இப்பேர்ப்பட்ட ஜன ஊழியர் சட்ட சபைக்குள் சென்றதும், சர்க்காரார் அட்வோகேட் ஜெனரல்’ பதவி தருகிறதாக சொன்னவுடன் தனக்கு ஏராளமான சொத்திருந்தும் வக்கீல் தொழிலில் ஏராளமாக பணம் சம்பாதிக்கும் திறமையிருந்தும், உத்தியோகம் என்றவுடன் ஜனங்களுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை மறந்து ஆவலுடன் ஏற்றுக்கொள்ளும்படியான காரணம் போட்டார். அதிலிருந்து பிறகு ஓர் பெரிய அந்தரடித்து நிர்வாக சபை அங்கத்தினர் பதவியையும், அடைந்ததுடன் நிற்காமல், முட்டிமன் கமிட்டி முன்பாக, நமது தேசத்திற்கு இனி சீர் திருத்தம் வேண்டியதில்லையென்றும் வாய் கூசாமல் சாக்ஷியும் சொல்லி, இந்தியா கவுன்சில் மெம்பருக்கு குறிபார்த்துக்கொண்டிருக்கிறார். இப்பேர்ப்பட்ட பிராமண மந்திரி சமீபத்தில் கும்பகோணத்திற்கு விஜயம் செய்திருந்தபொழுது, சென்னை பிராமணரல்லாத [illegible] மார்கள் வரும்பொழுது இந்த ம[illegible] கள் சைத்தான [illegible] வர்களாகையால் இவர்களைப் பஹிஷ்கரிக்க வேண்டுமென்று சொல்லி பிராமணரல்லாதாரைக்கொண்டே கருப்புக்கொடி பிடிக்கச்செய்யும் நமது ராவ் பஹதூர், ராவ் சாஹிப் பட்டங்களுடன் விளங்கும் காங்கிரஸ் சுயராஜ்ப கட்சியைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அய்யர் அய்யங்கார், வக்கீல் கோஷ்டியார், அப்பர் மந்திரிக்காக, பள்ளிக்கூடங்கள் மூலமாகவும், வக்கீல் சங்கத்தின் மூலமாக பூரண கும்பமெடுப்பதும் உபசார பத்திரம் படிப்பதும், வீடுகளில் உபசரித்து மரியாதை செய்து விருந்து கச்சேரிகள் வெகு சிறப்பாக நடத்துவதும், அவைகளுக்குத் தாங்களும் தங்கள் இனமும் மிகவும் நேர்த்தியான அயல் நாடுகளின்பட்டு, அல்பாக்கா முதலான துணிகளில் தயாரிக்கப்பட்ட உடைகளுடன் வெகு அலங்காரமாக வருவதுமாயிருந்தார்கள். இந்தக்கோலங்களெல்லாம் ‘ஹிந்து.” “சுயராஜ்யா” “சுதேசமித்திரன்” முதலான தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் பிராமண பத்திரிக்கைகளில் அத்தியாயம் அத்தியாயமாக பிரசுரிக்கப்பட்டிருந்தனவே ஒழிய, ஒரு பத்திரிகையாகிலும் கண்டிக்கவில்லை. இதன் காரணத்தையும் ரகசியத்தையும் பிராமணரல்லாதார் தெரிந்துகொள்ளவேண்டும். இனியாவது நமது கோடாலிக் காம்புகள் தங்கள் கடமையை உணரும்படி கடவுள் அவர்களுக்கு நல்லறிவும், தைரியமும் கொடுப்பாராக.

(குடந்தை தேவதாசன்).

(3-வது பக்கத்தின் தொடர்ச்சி)

ஈரோடு.

இந்நகர் மகாஜன ஹைஸ்கூல் போர்டின் பொதுக்கூட்டமொன்று, ஷை ஸ்கூல் வைஸ் பிரசிடெண்டு ஸ்ரீமான். ஈ.வெ. கிருஷ்ணசாமி நாய்க்கர் அக்ராசனத்தின் கீழ் கூட்டப்பட்டது. இதில், காலஞ்சென்ற பிள்ளையவர்கள், இந்த போர்டு மெம்பராக பல வருடங்கள் இருந்து செய்த அரிய ஊழியத்தைப்பாராட்டி, அவருடைய குடும்பத்தினருக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதுடன, 8—3—26 திங்கட்கிழமை ஹைஸ்கூலுக்கு, விடுமுறை கொடுக்கும்படியும் தீர்மானம் செய்யப்பட்டது.

(இந்த மீட்டிங்குக்கு பிராமண மெம்பர்கள் யாரும் வரவேயில்லை.)

கருங்கல்பாளையம்.

ஈரோட்டைச்சேர்ந்த, கருங்கல்பாளையம் வாசகசாலை ஆதரவில், ஸ்ரீமான். பிள்ளையவர்கள் காலமானதைக்குறித்து ஓர் அனுதாபக்கூட்டம், நடைபெற்றது. ஸ்ரீமான். குருமகராஜ வைத்தியர் தலைமை வகித்தார். ஸ்ரீமான், கே. ஆர் மீனாக்ஷிசுந்தரம் காலஞ்சென்ற பிள்ளையவர்களின் ஜீவிய சரிதத்தை எடுத்துக் கூறினார், மற்றும், ஸ்ரீமான். கே. பாலசுப்பராயலு நாயுடுவும், சில அபிமானிகளும் பேசினார்கள். அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஈரோடு சமரஸ சன்மார்க்க தமிழ் சங்கம்.

இச்சங்கத்தின் ஆதரவிலும் ஓர் கூட்டம் கூட்டப்பட்டு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் பிள்ளையவர்களின் மரணச் செய்தியைக் கேட்டதும் ஈரோட்டில் கதர் வஸ்திராலயம் மரியாதைக்காக மூடப்பட்டதுடன், "குடி அரசு, காரியாலயத்திலும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

திருப்பூர்.

ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை காலமானார் என்றும் செய்திகேள்விப்பட்டதும், திருப்பூரிலுள்ள கதர் கடைகள் யாவும் மூடப்பட்டன,

குடியாத்தம்

8—3—26-ல், ஸ்ரீமான் பிள்ளையவர்கள் மரணமடைந்ததற்காக அனுதாபக்கூட்டமொன்று இங்கரில் கூட்டப்பட்டது, ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர், ஸ்ரீமான் சுவாமி ஷன்முகாநந்தம் தலைமை வகித்தார். திருவண்ணாமலை ஸ்ரீமான் நா, அண்ணாமலைப் பிள்ளை, காலஞ்சென்ற தேசபக்தருடைய தியாகத்தையும். கதர் தொண்டையும் பற்றி விரிவாகப் பேசியதுடன், மற்றும் அவர் சம்பந்தமான பல அரிய விஷயங்களைக் கூறி அனுதாபத்தீர்மானத்தைப் பிரேரேபித்தார். யாவரும் 5 நிமிஷம் எழுந்து நின்று அனுதாபம் காட்டினார்கள்.

மதுரை.

மதுரையில், கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தில் 9-3-26ல ஓர் பெரிய மகாநாடொன்று நடைபெற்றது. ஸ்ரீமான். கே. வி. ராமய்யர் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான்கள். சேஷய்யங்கார், முன்கால பட்டாபிராமய்யர், பி. சுந்தரம் பிள்ளை முதலியோர் பேச, காலஞ்சென்ற பிள்ளையவர்களின் மரணத்துக்காக வருந்துவதாகவும். அவரது குடும்பத்தாருக்கு மதுரை நகர் வாசிகளின் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேலூர்.

7—3—26ல் வேலூர் மண்டி வாடையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான். அ குப்புசாமி முதலியார் காலஞ்சென்ற பிள்ளையவர்களின் தேச பக்தியையும், குணாதிசயங்களையும் பற்றி விரிவாகப் பேசியபின் அனுதாபத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். யாவரும் எழுந்து நிற்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தூத்துக்குடி.

8—3—26ல், காலஞ்சென்ற பிள்ளையவர்க்ள் காலமடைந்த சேதியைக் கேள்விப்பட்டதும், ஓர் மகா நாடு நடைபெற்றது. இதில் அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

நாகை தேசபக்த சமாஜ திருவிழா.

நாகையில் டாக்டர். நாயுடுவுக்கு முனிசிபல் சபை உபசாரப் பத்திரம்.

நாளது 1926-ஹூ மார்ச்சு மீ 10ந் தேதி மாலை 5-30 மணிக்கு முனிசிபல் சபையின் கூட்டம் தலைவர் ஜனாப் எம். ஒ. செய்கு பரீதுமரைக்காயர் தலைமையின் கீழ் கூடியது:—சுமார் 20 கவுன்சிலர்கள் வரையில் விஜயம் செய்திருந்தனர்."

நாகை தேசபக்த சமாஜத்தின் ஐந்தாமாண்டு நிறை விழாவுக்கு தலைமை வகிக்க விஜயம் செய்யும் தேச பக்தரான ஸ்ரீமான். டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்கள், இம்மாதம் 13. 14, தேதி இந்நகருக்கு விஜயம் செய்வதால் அன்னவரை நகரபரிபாலன சபையில் வரவேற்று ஒரு நல்வரவு உபசாரபத்திரம் வாசித்து கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தை சுயராஜ்யக்கக்ஷி கவுன்சிலரான ஸ்ரீமான். இ. டி. எஸ். கோதண்டபாணி பிள்ளை அவர்களால் பிரரேபிக்கப் பெற்று அதை ஸ்ரீமான். நல்லமுத்து முதலியார். மிஸ்டர். புரொளன் துரை இவர்களால் முறையே ஆமோதிக்கவும் ஆதரிக்கவும் பெற்றதும் ஷை தீர்மானத்தை சபை தலைவரும், நாகூர் வக்கில் ஜனாப் ஹமீது சுல்தான் மரைக்காயர் இவர்கள் எதிர்த்து பேசிய போதிலும் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டதில் எதிர்த்தவர்களுள்பட எல்லோராலும் அங்கீகரிக்கப்பெற்று ஏகமனதாய் நிறைவேறியது.

இத்தீர்மானத்தை நிறை வேற்றும் விஷயமாய் கவுன்சிலர் ஸ்ரீமான். இ. டி. எஸ். கோதண்டபாணி பிள்ளை அவர்கள் எடுத்துக்கொண்ட முயர்ச்சி முற்றிலும் பாராட்டத்தக்க தாகும்.

நிருபர்.

கோயமுத்தூர் தாலூகா மகாநாடு.

கோயமுத்தூர் தாலூகா, மகாநாடு, கோயமுத்தூருக்கடுத்த வெள்ளக் கிணற்றில், தமிழ் நாடு கதர் இலாகா காரியதரிசி ஸ்ரீமான் எஸ். இராமநாதன் அவர்கள் அக்ராசனத்தின் கீழ் இம்மாதம் 21-ந் தேதி நடைபெறும். அது சமயம் கோயமுத்தூர் ஜில்லா சட்ட சபை அங்கத்தினர்களும் ஸ்ரீமான்கள். கே, சுப்ரமணிய ஐயர், நா. ராமகிருஷ்ண நாயுடு, ஈ வெ. இராமசாமி நாயக்கர், சி. பி சுப்பையா முதலியார், D. S. பாண்டே முதலிய காங்கிரஸ் கனவான்களும் விஜயம் செய்வார்கள்.

ஸ்ரீமான் வெள்ளக்கிணர் சுப்பினிக்கவுண்டர் வரவேற்பு அக்ராசனராயிருப்பதோடு, கான்பரன்ஸுக்கு வேண்டிய சகல சவுகரியங்களையும் செய்து கொடுக்கத் தயவுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறார். வெள்ளக்கிணறென்பது, கோயமுத்தூரிலிருந்து 6 மைல். துடியலூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 1 மைல் இருக்கலாம். சட்ட சபை மெம்பரான ஸ்ரீமான். வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்களின் வாசஸ்தலம்.

சென்னை

மருத்துவர் சங்கம், பொதுக்கூட்டம்.

5—3—1926 ஆம் நால் மாலை 5-மணிக்குச் சென்னை தங்கசாலைத் தெருவு 220 ஆம்-எண் மருத்துவச் சங்க நிலையத்தில், பண்டித எஸ். எஸ், ஆனந்தம் அவர்களின் அவைத்தலைமையில் ஒரு கூட்டம் கூடினார்கள். அவ்வமயம் நீலகிரி என். பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள் பண்டைக்கால மருத்துவர்களைப்பற்றியும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் மருத்துவப்பெரியார் சிறுத்தொண்டரைப்பற்றியும் இதுவரையில் கிடைத்திருக்கும் வாலாறு, கல்வெட்டு, செப்பேடு முதலியவைகளைப்பற்றியும், திருச்செங்காட்டங்குடி சிறுத்தொண்டரின் வம்சத்தினரில் சிலர் மருத்துவக்குடி, கும்பகோணம் முதலிய இடங்களில் இருந்துவருவதைப்பற்றியும் இரண்டு மணி காலம் சொன்னார் பின்னர் இசைக்கருவிகளோடு தமிழ் வேதபாராயணம் நடைபெற்றது. சென்னை மருத்துவமணி வி. சக்கரவர்த்தி பண்டிதர் தமது மகன் மணவினை நடைபெற்றதற்காக மருத்துவ சங்கத்திற்கு 10 பத்து ரூபா நன்கொடை அளித்தார். சைதாப்பேட்டை எம்; சரவண பண்டிதர் அவர்கள தமது மகன் மணம் நடைபெற்றதிற்காக பத்து ரூபாய் நன்கொடை சங்கத்திற்கு அளித்தார். பின்னர் அக்கூட்டத்திற்கு வந்திருந்தோர்கட்கெல்லாம் அறுசுவையுடன் உண்டி நடைபெற்றது; சந்தனம் தாம்பூலம், பூ பன்னீர் முதலிய உபசாரங்களோடு இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது முடிவு பெற்றது.

ஓர் நிருபர்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாவை மறுப்பது என்னும் நாற்கூற்றுப் பொருளையும், உள்ளடக்கியே திருக்குறளில் மருந்தென்ற பெயரால் ஒரு அதிகாரமிருத்தல் காண்க. அன்றியும் காப்பு, நீக்கம், நிறைப்பு என்று மூன்று பாகுபாடுகளும் உண்டு. அதாவது நாட்டின் வெப்ப தட்பங்களுக்கும். பொருள், தொழில், தனித்தவாகளை, பனி, மழை, வெயில், பகல், இரவு, இவைகளுக்கு ஏற்றவகையாகவோ, உண்ணல், உடுத்தல், குடித்தல், படுத்தல், கிடத்தலாதியவற்றை உடனேயாவது, சிலநாட்செசன்றாவது, கெடுதி விளையாதவாறு தக்க பெரியோர் கூறியவாறு நடப்பதே காப்பென்னும் முதற்பிரிவாகும். இதில் பொருத்தமற்ற காரியங்களிற் புரிந்து அதன் காரணமாக வருகின்ற நோய்களை அபத்திய நோய்களென்றும், மண், பெண், பொருளாதியவற்றில் மனம் அதிகமாக ஆழ்ந்து நிற்பதை வாசனை என்பதும் நூற்றுணிபு அப்பொருட்கள் பிறிவாற்றாது உண்டாகும் நோய்களை வாசனை நோய்கள் என்றும், இப்பிறப்பிலோ, முற்பிறப்பிலோ, பிற உயிர்களுக்குத் தான் செய்த தீமைகளுக்கு ஈடாக வருகின்ற பிணிகளையே கருமநோய்களென்றும் பெயர் கூறுவர். இக்கருத்துப்பற்றியே வள்ளுவர் (நோய் முதல் நாடி) என்றார். இம்மூவகை பாகுபாடுகளுங்கண்டு அறிவதற்கே எண்வகைத் தேர்வு என்ற பெயரால் (எட்டு வகையால்) அறிவது தமிழ் வழக்கு. மருந்துவகை ஒன்பது வகையிற் கூறியதுடன் அமையாது, யோகவலத்தால் மாற்றுவது ஒன்றுடன் பத்தென்பது சித்தர் மரபு. இக்கருத்தினை திருமூலர் 8000 விளக்கும் அன்றியும் மருந்து வருகையில் மூன்று பிரிவுண்டு. அது ஒப்புறை, எதிருறை, கலப்புறை எனவும், தேவுறை, மக்களுறை, அசுரறை எனவும், சொல்லப்படும். எந்த வகையில் நோக்கினும் வட நாட்டில் சிறப்பாக வழங்குவதும், வருணாசிரமங்களால் கையாளப்படுவதும், மூலிகை ஒன்றினாலாகிய மருந்ததையே கொண்டதும், சமஸ்கிருத பாஷையுள்ளதும், தமிழ் நாட்டிற்கு, அதாவது புளி, காரம் தின்னுகின்ற மக்களுடையின் இயற்கைக்குப் பொருந்தாததும், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், இருடிகள் வழிவந்ததாகச் சொல்லும், ஆயுள்வேத வைத்தியத்திற்கும், சித்த வைத்தியத்திற்கும் ஒப்புக்கூற வெண்ணினால் மலைக்கும் மண்ணாங்கட்டிக்கும் உள்ள வேறு பாட்டிற்கு நிகராகுமன்றி வேறில்லை.

சங்கை.—ஆனால் நீர் கூறியது நன்றே; ஆயினும் நோடனுகாவிதியென்பது காப்பென்பதை ஒப்பினும் அவ்வாறே பொது மக்கள் நடந்தார்களா? அரசன் ஆணை செய்து வந்ததக ஏதாவது நூற்கள் ஆதாரமுதல் அதனை உதகரித்தல் நலமென்று கருதுகின்றேன்,

அன்புடையோய்! கூறுதுங் கவனிப்பாயாக. அங்ஙனம் ஆட்சியல்லாத ஒரு கொள்கையைப் பேசுவதும், எழுதுவதும் அறிவினமன்றி வேறல்ல. திரிசிராமலையை அடுத்துள்ள உறையூரில் அரசு புரிந்த கோப் பெருஞ் சோழனுக்கு ஆன்மநேய ஒருமையைப் கேள்வியாலுணர்ந்து, நீங்காத அன்புடைய பிசிராந்தையார் என்னும் பெரியார் தம்மை வினவிய புலவர்களுக்கூறிய பாவினம் ஒன்று :புறநானூறென்னும் நூற்குள் மலைபிலக்காக மிளிர்கின்றது. அதனைப் படித்துணர்ந்த எவர் மனந்தான் விம்மிதமடையாமலிக்கும். அத்தகைய சிறந்த நாகரிகம் பெற்று விளங்கிய நல்லார் கால்வழியிற்றோன்றிய நாம், இதுகாலை ஆரியர்களுடைய மோகவலையில் சிக்குண்டு, திகைப்புண்டு மிதித்தவன் போல விபரமிலலாது மனிதனுக்கு மனிதன் அடிமையென்ற கொள்கையில் விழுந்து தவிக்கின்றோம். ஆ! தெய்வமே!! இவ்வழி நீங்கி யாவரும் கடவுளுக்கு மாத்திரம் அடிமை என்ற கொள்கை தழைத்தோங்குமாறு நினது திருவருள் விளக்கம் செய்யாதா? நிற்க, பிசிராந்தையார் நரையும் மூப்பும் இல்லாது இருந்ததற்குக் காரணம் கூறுவது மிகவும் ஒப்புயர்வற்றதாக விருக்கின்றது.

> யாண்டு பலவாக நரையில வாகுதல்
> யாங்கா குதிரென வினவுதிராயின்
> மாண்ட வென் மனைவியொடு மக்களும்
> நிறைந்தனர்.
>
> யான் கண்டனைய ரென்
> இளையரும் வேந்தனும்
> அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
> யான்ற விந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர் யான் வாழுமூரே.

பொருள்:—புலவர்காள்! எனக்கு வயது பலவாகியும் நரையில்லாதிருத்தல எங்ஙனமானீர் எனக்கேட்குதலாம். அதற்கு விடை யானே கூறுவேன். கவனிப்பீர்களாக. கல்வி, கேள்வி, அறிவு ஆசாரங்களில் குறைவிலாத மேம்பாடுடையுடைய எனது வாழ்க்கைத் துணைவியும், எங்களிருவராலும் பெற்று வளர்த்த பிள்ளைகள் (தந்தைப்பறிவு மனையறிவு) என்றவாறே எனது பிள்ளைகளும், என்னிஷ்டத்துக்கு மாறுதலில்லாத வேலைபாட்களும், அரசனே தானும் நன்னெறி நின்றொழுகியும் குடிகளையும், அவ்வாறே நடத்துவதுமான இத்தகைய வளமலிந்த நாட்டிலுள்ள மெய்புணர்ந்தபெற்ற சான்றோர் (சித்தர்கள்) நான் இருக்கும் ஊரில் பலர் இருக்கின்றார்கள். ஆதலால் நரையில்லாது (மூப்பு மில்லாது) வாழ்கின்றேனென்றார். இக்கருத்தினையே நமது திருவருட் பிரகாச வள்ளலாரும் கூறியுள்ளார். அதாவது “நரை, மரண, மூப்பறியா நல்லவுடம்பினரே நற்குலத்தாரென வறிமின் நானிலத்தீர்” என்று விளக்கியுள்ளார். ஏனைய குலங்களைப் புழுக்குலமென்றும் இழித்துக்கூறியுள்ளார். இதனால் முற்காலத்தில் பெண் கல்வியும், ஆண் கல்வியும், வேலைக்காரனையும் கூறியதனால் யாவருங் கட்டாயக்கல்வி கற்று அமைதியுடன் வாழ்ந்திருந்து, தவத்தால் சாகாத வாழ்வுபெற்று வாழ்ந்திருந்தார்களென்பது திருக்குறளில் “எண்ணிய எண்ணியாங் கெய்துப” எனவும், “கூற்றுங் குதித்தலுங் கைகூடுமெனவும், “கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள் மேற்செல்லாதுயிருண்ணுங் கூற்று” எனவும், “ஊழையும் உட்பக்கங் காண்பர்” எனவும், “உலகில் வாழவேண்டிய முறை தெரிந்து வாழ்பவனைத் தேவனென்றும்”, அதாவது “வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்றும், அதாவது நோயும் வறுமையுமில்லாதவர்கள் தேவர்களாதலால் மக்களாக மண்ணுலகிற் பிறந்தும் தங்கள் சீலத்தால் தேவத்தன்மையுடையவர்களாக வாழ்ந்திருந்தனராதலால் நோய் வாராது காத்து வந்த முறையானது, தமிழ்நாட்டின் பண்டைய முறையானதாலன்றோ நோயணுகாவிதி யென்னும் பாக்களினீற்றில் மேற்கூறியவாறு வாழ்வார்க்கு எமன் பயமில்லை யென்பதை விளக்கவே (நமனார்க்கிங்கேது கவை நாமிருக்குமிடத்தே) என்று கூறியுள்ளது. ஏனைய வகைகளைச் சமய நேர்ந்துழிக் கூறலாமென்று முடித்தார்கள்.

தலைவர் திருவாளர் டாக்டர் பி. வரதராஜ நாயுடு அவர்கள் மிகவும் அகமும் முகமும் மலர்ந்து சுவாமிகள் பேசியதில், நான் பேசிவிளக்க வேண்டியது யாதுமில்லை என்று கூறி, தமிழ்வைத்திய வளர்ச்சிக்கு என்னாலான உதவியைச் செய்யத் தயாராகவுள்ளேன் என்றுகூறினார்கள்.

ஸ்ரீமான். துளசிங்கத்தினால் சபை வணக்கம் கூறி, மாலை யணிந்து $10\frac{1}{2}$ மணிக்குச் சபை இனிதாக நிறைவுற்றது.

இங்ஙனம்,
கண்டுமகிழ்ந்த தண்டமிழ்த் தொண்டன்,
சென்னை.

கொங்கு வேளாளர்

3-வது மகாநாடு.

2-வது நாள் 21—2—26 நடவடிக்கைகள்.

காலை 8-30 மணிக்கு மகாநாடு தேவார பாராயணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீமான். சிங்கையக்கவுண்டரவர்கள் அவைத்தலைமை வகித்ததும், சங்க காரியதரிசி, ஸ்ரீமான். V. C. சுப்பைய கவுண்டரவர்கள் சங்கத்தின் அறிக்கைப் பத்திரத்தைப் பின்வருமாறு படித்தனர்.

அறிக்கைப் பத்திரம்.

நமது சங்கம் ஆரம்பித்து, நாளது வரை அவ்வளவு விமர்சைக்கு வரவில்லை என்றும், அதில் காரியதரிசிகளாகிய நாங்கள் சரிவரக் கவனிக்கவில்லை யென்றும், சொல்லுவது சரியே; அதற்காக எங்கள் மீது குற்றம் சாத்தினாலும், நாங்கள் ஒப்புக்கொள்ளவும் வேண்டும். ஆனால் அப்படிக்குற்றம் சாட்டுவது சரியல்லவென்று நாங்கள் நம்பத்தகுந்த காரணங்களால் தெரிவிக்கிறோம்.

அதாவது நமது சங்கம் முதலில் ஊத்துக்குளியென்னும் சிறு கிராமத்தில் கெற்

பேற்பத்தியாயிற்றென்பதை யாவரும் அங்கீகரிப்பீர்கள். அது கொங்கு நாட்டில் ஓர் சிறப்பான ஊரே. பிறகு அவ்விடமிருந்து, நமக்குத் தாய்நாடும் எல்லா சௌகர்யங்களும் சிறப்பும் நிரம்பப்பெற்ற திருப்பூருக்குப் பிரசவமாயிற்று. அது எப்படி? என் கற்பனையோ என்பீர்கள். அப்படியல்ல. அதன் நாமதேயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், திரு-பூ, அழகு பொருந்தியதும் வாசனைக் காட்டக்கூடியதுமான ஓர் புஷ்பம். அது நமது மரபினில் முக்கியஸ்தர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் V. C வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்; நான்கு பட்டக்காரர்கள் முன்னிலையிலும் மற்ற நமது மரபினர்கள் ஆதரவிலும், நாமதேயம் வைக்கப்பெற்றது. இச்சங்கமாகிய குழந்தை நாளுக்குநாள் வளர்ந்து பக்குவமடைந்து வந்தது. அதை யறிந்த நமது மரபினரெல்லோரும், அதற்கு விவாகம் நடத்த உத்தேசித்து முகூர்த்தம் நிர்ணயித்து நமது நாட்டிற்கும், ஜில்லாவிற்கும் முக்கிய நகரமாகிய கோயமுத்தூரில் நமது ஜாதிக்கு முக்கியஸ்தரும் பட்டக்காரருமாகிய ஸ்ரீமான். நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாரவர்களின் தலைமையின்கீழ் கூடி அதிக விமரிசையாக விவாகம் நடைபெற்றது. இதுவும் என் கற்பனையல்ல, எல்லாம் பொருந்துமாறு நடந்த இடமானது இந்த அபிப்பிராயத்தை வெளியிடுகிறது. அதாவது கோ-அயன்-முத்து ஊரில் நடந்தது. அதன் அர்த்தம் முழுமுதற் கடவுளும் நமது எல்லாம் வல்ல இறைவனும் பசுவை வாகனமாக உடைய சிவபெருமானையும், முத்து என்பது ஓர் பெண்ணைக் குறிப்பதால் ஷை கடவுளின் பத்தினியாகிய பார்வதி தேவியையும் விளக்குகிறது. இப்படி அவ்வூரில் விவாகமாயிற்று.

இப்போது நமது சங்கமாகிய குழந்தையானது பாலிய, யௌவன, கௌமார திசையை இப்போது அடைந்து நல்லதிடகாத்திரத்துடன் விமரிசையாக முன்வந்திருக்கிறதென்பதை நீங்கள் யாவரும் பார்க்கிறீர்கள். இத்தருவாயில் இதை நல்ல வழியிலேயே நடத்திவைக்க வேண்டுமென்று நமது அக்கிராசனாதிபதியவர்கள் சேலம் ஜில்லாவிலிருந்து அதிக சிரமம் எடுத்துக்கொண்டு வந்திருப்பதாலும்; சன்மார்க்க வழியிலேயே மேம்பாடும் நன்மையும் அடையும்படி அவர் கருணை கூர்ந்து வந்திருப்பதாலும், நமது சங்கம் சிறப்படையுமென்பதற்கு ஐயமில்லை. ஆனால் இம்மகாநாடு பொள்ளாச்சி வந்ததற்கும் ஒரு காரணம் உண்டு. அதாவது அருளில்லார்க் கவ்வுலகமில்லை; பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை, என்ற ஆன்றோர் வாக்குப்படி பொருளில்லாது போனால், எவ்வளவு புத்திமானாயிருந்தபோதிலும், சிறப்படைய முடியாதென்பது யாவரும் நன்குணர்ந்த விஷயம். அதற்கிசைய இந்நகரின் நாமதேயமே அப்பொருளைக்கொடுக்கிறேன், . “வா, தைரியமாயும் ஊக்கத்துடனும் காரியாதிகளைச் செய்” என்று அழைத்து விருத்தியடையச் செய்யுமாறு கூப்பிட்டிருக்கிறது. எப்படியெனில் பொருள், ஆட்சி, பொள்ளாச்சி என இருக்கிறது. அதாவது பொருளைத் திரவிய முதலிய ஆதாரங்களை ஆட்சி கொடுக்கிறேன், என்பதனால் வியக்தமாகிறது; அதுவுமன்னியில் நமது ஜில்லாவில் எல்லாத்தாலூக்காக்களிலும் பஞ்சம் மேலிட்டு இச்சங்கமானது அதிக வருத்தப்பட்டிருக்கும் தருவாயில் பஞ்சம் என்ன என்பது அறியாமலும், பணப்பெருக்குள்ளதுமான இத்தாலூக்காவானது பயப்படவேண்டாம், தைரியமாயிரு; ஆட்சி கொடுக்கிறேன்: நமது வழக்கத்தை அனுசரித்து தகப்பன் பெண்ணுக்கு ஆட்சி கொடுக்கும் மாதிரி, கனவான்களே! நீங்களெல்லோரும் தகுந்த உதவி ஆட்சிகொடுத்து காரியத்தை ஊக்கத்துடன் கைப்பற்றி நமது சீர்குலைந்து கெட்டிருக்கும், நமது மரபினரனைவோர்களை முன்னிருந்த கீர்த்தி, சிறப்பு முதலியவைகளை அடையும்படி முயற்சி செய்யவேண்டுகிறேன், இச்சங்கத்தின் முயற்சி கைகூடவும் நமது குலம் விருத்தியடையவும் இறைவன் அருள் புரிகுவாராக.

காரியதரிசியவர்கள் இந்த அறிக்கைப்பத்திரத்தை வாசித்ததும் கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த ஸ்ரீமான் N. S. ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் (கல்வி) என்ற விஷயத்தைப்பற்றி ஓர் சிறிய பிரசங்கம் செய்தார். பின்னர், ஸ்ரீமான்கள். சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார், டி. வ. ராமலிங்கம் செட்டியார், செல்லப்ப கவுண்டரவர்கள் முதலியோர், கல்வி, மதுவிலக்கு, முதலியவைகளைப்பற்றிப் பேசினார்கள்.

அதன் பிறகு ஸ்ரீமான்களான K. R. ஈஸ்வரமூர்த்திக்கவுண்டர், P. ரத்தினசபாபதிக்கவுண்டர், புதுப்பாளையம் ஜமீன்தார் ரத்தினசபாபதிக்கவுண்டர், ஓலப்பட்டிக்குமரவேலப்ப கவுண்டர், V. S. ராஜாக்கவுண்டர், பெரியசாமிக்கவுண்டர் B.A. B L., அப்பாமுத்துக்கவுண்டர், K. S. ராமசாமிக்கவுண்டர், செட்டியண்ணக்கவுண்டர், V.C. பழனிச்சாமிக்கவுண்டர், கப்பினி கவுண்டர், V. C. சுப்பைய கவுண்டர், V. K. பழனிச்சாமிக் கவுண்டர், முதலிய கனவான்கள் அடியிற்கண்ட தீர்மானங்களை பிரேரேபிக்கும் •முகத்தாலும் ஆமோதித்தும் ஆதரித்தும் அவரவர்களுக்கேற்ற முறையில் சாதுர்யமாகவும் சாமர்த்தியமாகவும் பேசினார்கள்.

தீர்மானங்களின் விவரமாவது:—

1. நமது குலத்தினர் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டவரும், பெரிய தேசாபிமானியுமான ஸ்ரீமான். செட்டிபாளையம் அய்யாசாமிக் கவுண்டரவர்கள் காலஞ்சென்றதைப்பற்றி இந்த மகாநாடு தனது வருத்தத்தையும் மேற்படியாரின் குடும்பத்தார்களுக்குத்தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. கொங்கு வேளாளப் பெண்மணிகள் நூல் நூற்றலைத், தங்களது குலதர்மமாகக் கொள்ளவேண்டுமென்றும், சமுகத்தார் அனைவரும் எக்காலத்திலும் கதரையே அணிய வேண்டுமென்றும், நாட்டின் பஞ்சத்தைப் போக்கக் கைராட்டினம் வல்லமையுடையதென்ற இம் மகாநாட்டின் நம்பிக்கையை, மகாத்மா காந்திக்கு அறிவிப்பதாயும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. சென்ற வருஷம் கம்போடியா பருத்திச் செடியைப் பிடுங்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தைப் பொள்ளாச்சி தாலூக்கா கோட்டூர் ஆனைமலை பிர்க்காவில் சில கிராமங்களில் மாத்திரம் கூடி உத்தரவை நீக்கிவிட்டார்கள். அதே விஷயத்தைக் கோட்டூருக்கடுத்த அங்குலக் குறிச்சியிலிருந்து எலெய முத்தூர் வரையிலும் மேற்படியாய் இவ்வருஷமாவது செடியைப் பிடுங்காமல் நிறுத்தும்படியாக இம் மகாநாடு கவர்ன்மென்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. நமது வகுப்பில் பெரும்பாலான ஏழை மாணவர்கள் வெளியூர்களுக்குப் போய் கல்வி கற்கமுடியாமலிருப்பதாலும், படிப்பில்லாமல் அவர்கள் இருப்பது நமது ஜாதி முன்னேற்றத்திற்கு பெருந்தடையாய் இருப்பதாலும், மகாநாட்டின் ஆதரவில் கிராமங்கள்தோறும் பாடசாலைகளை ஏற்படுத்தி இலவசமாய் கல்வி கற்பிக்க வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

அப்படி நடத்தும் பாடசாலைகளின் செலவுக்கு நமது வகுப்பினிடம் மொத்தம் கந்தாயத்தில் ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் சந்தாவும், மற்ற தொழில் செய்கிறவர்களிடமும் பிரமுகர்களிடமும் தரத்திற்குத் தகுந்தபடி சன்மானங்களும், பெற்று பள்ளிக்கூடங்களை நடத்திவர வேண்டுமாம்.

இதற்கு என்று சங்கத்தின் ஆதரவில் கல்வி போர்டு என்று ஒன்று ஏற்படுத்தி, மேற்படி காரியங்களை நிர்வகிக்கவும் மேல் மேலும் தகுந்த மாதிரியில் கல்வியை அபிவிருத்தி செய்யவும் நிர்வாகஸ்தர்களை நியமிக்க வேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

5. கோ—ஆப்ரேடிவ் பாங்குகளை கிராமங்கள் தோறும் ஸ்தாபிக்கவும், குடியானவர்களுக்குத் தேவையான போது குறைந்த வட்டிக்கு பணவுதவி ஏற்படுத்துவதற்கும், மகாஜனங்களையும் கவர்ன்மெண்டாரையும் முயற்சி கொள்ளுமாறு இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

6. நமது மரபைச் சேர்ந்த மாணவர்களின் வித்தியாபிவிருத்திக்காக ஒவ்வொரு தாலூக்காவிலும் சௌகரியமான இடங்களில் குருகுல முறையில் சம்மந்தப்பட்ட தாலூக்கா வாசிகள் முயற்சி செய்து பணம் வசூலித்து ஆரம்ப பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்திவரவேண்டுமென்றும், ஜில்லாவில் சௌகரியமான ஒரு இடத்தில் மேல் படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு உயர்தரக் கலாசாலையை ஜில்லா வாசிகளின் பொது முயற்சியால் தொகை வசூலித்து ஸ்தாபித்து நடத்தி வரவேண்டுமென்றும், இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

7. நமது வகுப்பில் கல்யாண காலங்களில் அளவுக்கு மிஞ்சிய மொய் வாங்குவதால் பல குடும்பங்கள் கடன் முதலிய கஷ்டங்களுக்கு உட்படுவதால் இனிமேல் நடக்கும் சேவைகளில் 1 ரூபாய்க்குமேல் மொய் வாங்கவோ வைக்கவோ கூடாதென்றும் கல்யாண முதலிய விசேஷ காலங்களில் அநாவசியமாகவும், டாம்பீகமாகவும், செய்யப்படும் மேளம் வாணம் முதலிய செலவுகளை அறவே ஒழிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

8. ஒவ்வொரு தாலூக்காவிலிருக்கும் சரியான பொது உழைப்பிற்கு முன்வரும் கனவான்கள் அடங்கிய பஞ்சாயத்துக் கமிட்டி ஒன்று நியமிக்கவேண்டியது அவசியமென்றும் மேற்படி கமிட்டி கிராமங்களிலுள்ள கட்சிப் பிரதி கட்சிகளை வியாஜ்ஜியம் வியவகாரங்கள் முதலியவைகளை அங்கங்கே போய் மத்தியஸ்தர்களை ஏற்படுத்தி சமாதானங்களை உண்டாக்கி வேண்டுவன செய்ய வேண்டியதென்றும், பின்னும் சங்கத்தின் மூலம் ஏற்படும் சகலவிதமான வரி முதலியவைகளை வசூல் செய்து மூலதனம் சேர்க்கவேண்டிய பொறுப்பை மேற்படி கமிட்டியாருக்குக் கொடுக்கும்படிக்கும், அவசியமான சப் கமிட்டி நியமிக்கவும் சங்கத்தின் சார்பாக அவசியமான செலவுகளைச் செய்யவும் இன்னும் முன்வரும் மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளவும் பூரண அதிகாரம் கொடுத்து இதற்காக அடியிற்கண்ட கனவான்களை கமிட்டி மெம்பர்களாக நியமிக்கவேண்டுமாயும், இந்தக் கமிட்டியின் வேலைகளை அடுத்த மகா நாட்டில தெரிவிக்க வேணுமாயும் தீர்மானிக்கிறது.

9. இக்கொங்கு மண்டலத்தில நமது ஆப்த நண்பர்களாகிய செங்குந்த முதலியார்களுடன் கோவிற்பூஜை பண்டாரங்கள் இன்னும் இதர வகுப்பு நண்பர்கள் முதலானவர்களெல்லாம் தனித்தனி மகாநாடுகள் கூடி கிரமமான வழியில் அபிவிருத்தி செய்து வருவதைக்கண்டு அவைகளைச் சாத்தியமான வரை ஆதரித்து எல்லா ஜாதியார்களுக்குள்ளும் அன்பு விருத்தி செய்யவேணுமாய் இம்மரபினர்கள் யாவரையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. நமது குலத்திலுள்ள ஒவ்வொருவரும் மது அருந்தவோ அல்லது விற்கவோ, மரம் விடவோ முதலிய எந்தவிதமான சம்பந்தமும் வைக்கக்கூடாதென்றும், மேற்படி விஷயமாய் முன் மகாநாட்டில் ஏற்படுத்தின தலைவர்கள் மேற்படி தீர்மானத்தை அசட்டையாய் விட்ட விஷயத்தைக் குறித்து இம் மகாநாடு தீராத துக்கத்தை அடைகிறதும் தவிர, மேற்படி தலைவர்களின் யோசனையின் பேரிலும் இன்னும் வேண்டிய தலைவர்களை ஏற்படுத்தி ஒவ்வொரு கிராமங்களுக்கும் போய் பஞ்சாயத்தார் மூலமாயும் சாத்விகமாய் அதனால் ஏற்படும் கெடுதல்களை எடுத்துச் சொல்லி எல்லோரும் மதுவை அடியோடு தொலைக்கும்படியான ஏற்பாடு செய்யும்படியாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. தவிர சென்னை மாகாண சட்ட சபையில் பூரண மதுவிலக்குக்காக உடனே தீவிர முயற்சி எடுக்குமாறும் அவ்வித முயற்சிகள் தேசிய மகாசபையின் சார்பாக எடுக்கப்பட்டால் அவைகளில் நமது குலப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டுமாயும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

பின்னர் ஸ்ரீமான் K. S. ராமசாமி கவுண்டரவர்கள் குருகுல முறையில் கிராமங்களில் கல்வி போதிக்கவேண்டும் என்கிற தீர்மானத்தையும், ஐக்கிய நாணயச் சங்க விஷயமாயும் திறம்பட பேசியது அறிவாளிகளால் போற்றத்தக்கதாகவிருந்தது. அவர் குருகுலத்தைப்பற்றி பேசிய விஷயத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

உலகத்தில் மனிதன் தன் வாழ்க்கை நலனை ஆராய்ந்தறிய வேண்டியது அவரவர் கடமையாகும். கல்வியின் மூலியமாகத்தான் அறிவை விர்த்திசெய்யவேண்டும். குடும்பம், ஜாதி, ஊர், உலகம் போன்ற எல்லா நலனையும் நாம் கவனிக்கவேண்டும். முன் வந்த தீர்மானத்திற்கும் எனது தீர்மானத்திற்கும் வித்தியாசமுண்டு. சாந்தகுணமுள்ள பிள்ளைகளைக் குருகுலத்தால் பெறலாம். குருவும் சிருஷ்யனும் ஒரேயிடத்திலிருந்து கொள்ளலாம், குருவினிடம் கூடவேமாணவனிருப்பதால் அவனுக்கு மிகுந்த பக்குவம் உண்டாகும். மாணவர்களுக்கு மரத்தடியில் கல்விகொடுக்கலாம், அதற்கு வசதியான இடமிருந்தால் போதும். அழகிய கட்டிடங்கள் தேவையில்லை. சாந்திநிகேதனம் முதலிய குருகுலங்கள் அப்படித்தான் நடந்து வருகிறது. நல்ல இடத்தில் சிக்கனமாக சாலைகள் அமைத்தால் போதுமானதாகும். அதிகப்படியான வேலை ஒன்றுமில்லை. நல்ல உபாத்தியாயர் ஒருவரிருந்தால் போதுமானதாகும். குருகுலத்தில் பெருக்கி வழித்தல், விவசாயம், சமையல் முதலிய எல்லாத் தொழிலையும் மாணவர்கள் செய்யவேண்டும். இவ்வாறு கிராமங்கள் தோறும் குருகுல முறையில் பிள்ளைகளுக்குக் கல்வி கொடுத்தால், ஒவ்வொரு பிள்ளையும் நல்ல பக்குவமடைந்து வருவார்கள் என்று உருக்கமாய்ப் பேசிவிட்டுக் கடைசியாக திருப்பூரில் தாம் ஒரு குருகுலம் ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாயும், தாம் அதற்கு வருஷம் 1000 ரூபாய் கொடுத்துதவுவதாயும் சொன்னார்.

தீர்மானங்கள் முடிந்ததும் இவற்றை அமுலுக்குக் கொண்டுவர பிரஸ்தாப வருஷத்திற்கு 3000 ரூபாய் வசூலிப்பதென்றும், நியமனம் செய்து அதற்காக அடியிற்கண்ட கனவான்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஸ்ரீமான்கள். பழய கோட்டைப் பட்டக்கார் அவர்கள், V. C. வெள்ளியங்கிரிக் கவுண்டரவர்கள், K. S. ராமசாமிக் கவுண்டவர்கள், A. N, ராஜாக்கவுண்டரவர்கள், T. குமாரவேலக் கவுண்டரவர்கள், C. K. ராமசாமிக் கவுண்டரவர்கள், V, S. ராஜாக்கவுண்டரவர்கள், கரிச்சிபாளைக்கவுண்டரவர்கள், பாதர் தொண்டமான்பகதூர் கவுண்டரவர்கள், சுப்பே கவுண்டரவர்கள்.

ஆகிய கனவான்களைக் கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. உடனே ரூபாய் 3000-க்கு மகாநாட்டில் கையொப்பம் வாங்கியதில் 1900 ரூபாய் வரை கையெழுத்துப் போட்டார்கள். சில கனவான்கள் ரொக்கமும் கொடுத்துவிட்டார்கள். இதை ஸ்ரீமான். P. இரத்தின சபாபதிக் கவுண்டரவர்கள் சபையில் படித்துக்காட்டினார். பின்னர் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியாரவர்கள் எழுந்து மகாநாடு நடந்ததையும் அதன் பலன் தேசத்திற்கு அதிமுக்கியமானதென்பதையும், மதுவை விலக்கவேண்டியதையும், நூல் நூற்க வேண்டியதையும் கதர் கட்டவேண்டியதையும் வற்புறுத்தி; மீண்டும் கொங்கு வேளாள சமூகத்தினரை மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்வதாக வேளாளப் பிரபுக்கள் மனதில் பதியும்படி சுருக்கமாக பேசினார்.

வந்தனோபசாரங்களுடன் மகா நாடு முடிவடைந்தது.

குறிப்பு:—

பொதுவாக மகாநாடு சிறப்பாகவே நடந்தது. உபசரணைக் கமிட்டியார்கள் வேளாள யூனியன் மில்லிலேயே பிரதிநிதிகளுக்கு சகல வசதியும் செய்து கொடுத்திருந்தனர். சாப்பாடு சிற்றுண்டி முதலிய வசதிகளும் எல்லோருக்கும் மிக்க சௌகரியமாகவே நடந்தது. புதுப்பாளையம் மிட்டாதார் ஸ்ரீமான், ரத்தின சபாபதிக் கவுண்டரவர்கள், பேட்டகாரன் புதூர் பழனிச்சாமிக் கவுண்டரவர்கள், இவ்விருவரும் வாலண்டியர் கேப்டன்களாகவிருந்து வாலண்டியர் படையை வெகு சுறுசுறுப்பாகவும் ஜனங்களுக்கு வேண்டிய உபகாரமாகவும் நடத்திவைத்தது பாராட்டத்தக்கதாகவிருந்தது. சென்ற மகாநாடுகளில் கதர் கட்டவேண்டுமென்று தீர்மானங்கள் செய்திருந்தபோதிலும் அநேகம் வேளாள குல பிரமுகர்கள், மல்லும் சில்க்கும் ஆடம்பரமாக அணிந்து கொண்டுதான் வந்திருந்தனர். மதுவிலக்கு முதலிய தீர்மானங்கள் செய்தும் சங்கம் உருப்படியான வேலை செய்யவில்லையென்று இவ்வருஷம் பிரசங்கமேடை ஏறியவர்களெல்லாம் குறிப்பிட்டதால், இவ்வருஷம் பிரசாரக்கமிட்டி ஏற்படுத்தியதும்; அதற்கு பணம் சேகரித்ததும் மெச்சத்தக்கதே. இம்மகாநாட்டில் சட்டசபை விஷயமாக ஒருவிதமான பிரஸ்தாபமும் பேசப்படவில்லையென்ற சந்தி இருந்தாலும், மறைமுகமாக பிரஸ்தாபமில்லாமலில்லை. தேசியக்கட்சி [illegible] [illegible]லக்கை, ஆதரித்தால், உதவிபுரியவேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்தது, இது ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரவர்கள் தந்திரம். சட்ட சபையில் உங்கள் உதவியிருந்தால் கள்ளை நிறுத்தலாம் என்று ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்கார் ஜாடையாக ஒரு வார்த்தைபோட்டார், சட்ட சபையென்ற பேர் சொல்லாமலே எல்லாரும் ஒருவித அபிப்ராயத்துக்கு வந்தால், எக்காரியமும் சாதிக்கலாம் என்று பன்னிப்பன்னி ஸ்ரீமான். டி. எ. ராமலிங்கம் செட்டியாரவர்கள் குறிப்பிட்டார். மறைமுகமாக சட்டசபை பிரஸ்தாபம் உண்டு என்றே சொல்லலாம். மகாநாட்டில் சட்டசபைப்பாட்டு அதிகமாகவே முழங்கியிருக்கும். ஆனால் ஸ்ரீமான் ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கர் கூட்டத்திலிருந்துவிட்டார். இதுதான் மர்மம். ஸ்ரீமான்கள் கே. எஸ். ராமசாமிக்கவுண்டர், பி. ரத்தின சபாபதிக் கவுண்டர், சி வி. சுப்பைய கவுண்டர், அய்யாமுத்துக் கவுண்டர் இன்னும் சில முக்கியஸ்தர்களும் மகாநாட்டில் எடுத்துக் கொண்ட பொறுப்பும் அக்கறையும் பாராட்டத்தக்கதே.

உண்மையான கதர்.
கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

S. ராமநாதன்
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:— ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

S. ராமநாதன்
காரியதரிசிகத்தர், இலாகா.

தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

உள்நாட்டிற்கு ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ரூ. 3—0—0
சாதாரண பதிப்பு ரூ. 2—0—0

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலையம்".
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கைகால் ஓய்ச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45 வருஷகாலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை யடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துக்கொண்டிருக்கும் நற்சாக்ஷிப்பத்திரங்களே போதுமான சான்றாகும். இன்றைக்கே உபயோகித்து குணத்தையறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

"தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும்
ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

"தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**
காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

சேலம் பனியன்கள்

எங்களிடம் பலமாதிரியான பனியன்கள் தயார் செய்யப்படுகிறது. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் இதர விஷயங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விக்டோரியா நிட்டிங் பாக்டெரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.

டைமண்ட் பிரஸ், ஈரோடு.

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்தசார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும். K. N. பெரியசாமி நாயுடு,
புரொப்ரைட்டர்.

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ் நாடு கதர் போர்டின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்
கத்தர் ஸ்டோர், அமராவதிபாளையம்
பொன்னுக்காளிபாளையம் போஸ்ட்
திருப்பூர் மார்க்கம்

மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானால், உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தை வாசியுங்கள். இந்நூல் ஸ்ரீமான். தாசி இராஜகோபால பூபதி அவர்களால் இயற்றப்பட்டது. இதில் உலகத்தில் நடக்கும், பலவகை மோசங்கள் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் மேற்படி மோசக்காரர்கள் வசம் அகப்படாமல் தப்பித்துக்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமாய் இருப்பதன்றி விடாநகைப்பையும் விளைவிக்கும். நமது நாட்டுப் பெண்கள் இப்புத்தகத்தை படித்தால் குருட்டு நம்பிக்கை என்பது நமது நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள், 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1-0-0 வி. பி. சார்ஜ் வேறு.

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ.,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

முக்கிய கவனிப்பு.
18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.

குடி அரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 ஷ் அச்சடித்த அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம் காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோல்ட்கோல்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0
நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0
நெ. 3 22 காரட்டு ரோல்ட் கோல்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.